HINDU LAW SERIES—NO. 1.

# STRIDHANAM.

## A SMALL TREATISE ON HINDU LAW OF STRIDHANAM.

# ஸ்திரீதனம்.

ஹிந்துக்களில் [illegible] ஸ்திரீதனசட்டம்.

ஸ்மிருதிகளினுடையவும் ஹைக்கோர்ட்டுகளின் கேஸுகளினுடையவும்

சாராம்சம் அடங்கியுள்ளது.

BY

M. S. PARTHASARATHI IYENGAR, B.A., B.L.,

PLEADER, AUTHOR OF COMMENTARIES ON "SARDA ACT", MADRAS LOCAL BOARDS ACT, IN TAMIL, AND EDITOR, THE TAMIL ALL INDIA LAW JOURNAL, TIRUVALLUR.

Y. M. C. ASSOCIATION PAGANERI

Published by the Tamil All India Law Journal Office

TIRUVALLUR.

1931.

*All Rights Reserved.*

விலை அணா 8.] [தபால் சார்ஜ் வேறு.

# தமிழ் அகில இந்தியா லா ஜர்னல்.

## ஒரு அருமையான மாதாந்திர சட்டப் பத்திரிகை!!

வக்கீல்களால் அனுபவ சட்ட ஞானத்தினின்றும் இயற்றப்பெற்றுள்ளது.

ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளால் புகழப்பெற்றது !

மாதம் மாதம் 80-பக்கங்களுக்கு குறையாமல் வெளிவரும்

ஓர் சட்ட பொக்கிஷம் !!

**வியாபாரிகள், ஜமீன்தார்கள், லோகல் போர்டு மெம்பர்கள், நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் முதலியவர்களுக்கும் வியவஹாரஸ்தர்களுக்கும் வெகு முக்கியமானது. ஹைக்கோர்ட்டு தீர்மானங்கள், சட்ட வியாசங்கள் முதலிய அரிய**

**சட்ட விஷயங்கள் அடங்கியுள்ளது.**

உயர்ந்த கிளேஸ் காகிதம். என்றும் சாஸ்விதமாக பெற்றிருக்க வேண்டிய ஓர் அருமைப் பத்திரிகை.

சட்டப் பயிற்சி இல்லாதோர்க்கு சட்ட ஞானத்தையூட்டி எப்பொழுதும் கைகார்க்கும் ஓர் பெருந்துணை. எமது சஞ்சிகையை தவறாமல் படித்தவர்களில் பலர் அநேக கேசுகளைத் தாங்களே ஜெயித்ததாக எழுதியிருக்கின்றனர்.

**வருஷ சந்தா ரூபா 5—0—0.** [தபாற்கூலியுள்பட.]

**அயல் நாடுகளுக்கு 5—12—0.**

ஒவ்வொரு வருஷமும் ஏப்ரல் மாதத்தில் ஒரு வால்யூம் ஆரம்பம்.

ஏப்ரல் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரையில் ஒரு வால்யூம்.

1931—32-ம் வருஷம் 3-வது வால்யூம் நடக்கிறது.

1929–1930-ம் வருஷ வால்யூம் தோல் பைண்டு புஸ்தகம் விலை ரூபா 6 0-0.

1930-31-ம் வருஷ வால்யூம் ,, ,, ,, 6-0-0.

தபால் சார்ஜ் 0—8=0.

சாரதா சட்டம் 30-பக்கங்களையுடையது. விலை அணா 0—6—0.

மானேஜர்,

அகில இந்தியா லா ஜர்னல் ஆபீஸ்,

திருவள்ளூர் M. & S. M. Ry.

# முகவுரை.

ஹிந்து சட்டமானது மற்ற சட்டங்களைப்போல் ஒருங்காகத் திரட்டி எழுதப்படவில்லை. ஸ்மிருதிகளிலும் இவைகளில் உள்ள வியாக்கியானங்களிலும் சொல்லப்பட்டிருக்கும் அம்சங்களை சமய உசிதமாக பொறுக்கியும், இதர அம்சங்களை அவ்வப்பொழுது சேர்த்தும் இந்தியாவிலுள்ள ஹைக்கோர்ட்டுகளிலும் இங்கிலாந்திலுள்ள பிரிவி கௌன்சிலிலும் அனேக தீர்மானங்கள் நடந்தேறியுள்ளன. அவற்றைக்கொண்டு தான் ஹிந்து சட்டமானது இப்பொழுது அனுசரிக்கப்பட்டு வருகிறது. இவைகளை என்னால் கூடிய வரையிலும் திரட்டி ஒரு சிறிய புஸ்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறேன்.

ஸர். ஹரிசிங் கவர் என்பவரும், ஸர். டின்ஷா முல்லா என்பவரும் ஆங்கிலத்தில் ஹிந்து சட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இப்புஸ்தகத்திலுள்ளவை பெரும்பாலும் அவர்களுடைய மொழிகளையே அனுசரிக்கப்பட்டிருக்கின்றன.

இனி, ஹிந்து சட்டத்தில் மற்றுமுள்ள விஷயங்களை அதாவது பொது வார்சுமுறைமை, ஸ்வீகாரம், அவிபக்தகுடும்பம், ஸ்திரீசொத்து, பாக பிரிவினை, முதலியவைகளைப்பற்றி இப்புஸ்தகத்தைப்போல் சிறு புஸ்தகங்களை வெளியிட தொடங்கியிருக்கிறேன். தமிழ் நாட்டுமக்கள் யாவரும் என்னை ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திருவள்ளூர்,
1—4—31.

M. S. பார்த்தசாரதி அய்யங்கார்,
ஆசிரியர்.

# குறிப்பு விளக்கம்.

இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தில் அடியிலும் M. L. J. என்றும் Mad. என்றும் Bom. என்றும் இம்மாதிரி அநேக சட்ட ரிப்போர்டுகளும் இன்னும் மற்ற புஸ்தகங்களும் குறிப்பிட்டுள்ளன. ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னால் (a) என்றும் (b) என்றும் குறிக்கப்பட்டு அதேபக்கத்தில் அடியில் (a) அல்லது (b) என்பதற்கு நேராக சில சட்ட ரிப்போர்ட்டுகள் குறிக்கப்பட்டுள்ளன. இதன் அர்த்தம் என்னவென்றால், எதைப்பற்றி ஒருபக்கத்தில் சொல்லப்பட்டதோ அவ் விஷயமானது அடியில்குறிக்கப்பட்டிருக்கும் சட்டரிப்போர்ட்டுகளின் சாராம்சத்தை சிறிய வாக்கியங்களில் திரட்டி எழுதப்பட்டது என்றும் அந்தந்த ரிப்போர்ட்டுகளில் இன்னும் விரிவாகவும் பூரணமாகவும் காணப்படும் என்றும் அர்த்தமாகும். இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தின் அடியில் சட்ட ரிப்போர்ட்டுகள் சுருக்கமாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| MAD. | .... | மதராஸ் லா ரிப்போர்ட்ஸ். |
| ALL. | .... | அலஹாபாத் லா ரிப்போர்ட்ஸ். |
| W. R. | .... | வீக்லி ரிப்போர்ட்டர். |
| M. I. A. | .... | மூர்ஸ் இந்தியன் அப்பீல்ஸ். |
| A. W. N. | .... | அலஹாபாத் வீக்லி நோட்ஸ். |
| CAL. | .... | கல்கத்தா லா ரிப்போர்ட்ஸ். |
| C. W. N. | ... | கல்கத்தா வீக்லி நோட்ஸ். |
| I. C. | .... | இந்தியன் கேஸஸ். |
| PATNA. | .... | பாட்னா லா ரிப்போர்ட்ஸ். |
| M. L. J. | ... | மதராஸ் லா ஜர்னல். |
| B. L. R. | ... | பாம்பே லா ரிப்போர்ட்டர். |
| BOM. | ... | பாம்பே லா ரிப்போர்ட்ஸ். |
| A. I. R. | .... | ஆல் இந்தியா ரிப்போர்ட்டர். |
| P. C. | ... | பிரிவி கௌன்சில். |
| B. H. C. R. | ... | பாம்பே ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்ஸ். |
| M. H. C. R. | ... | மதராஸ் ஹைக்கோர்ட்டு ரிப்போர்ட்ஸ். |
| N. L. R. | ... | நாகப்பூர் லா ரிப்போட்டர். |

அகில இந்தியா லா ஜர்னல் பத்திரிகை என்பது திருவள்ளூரில் பிரசுரிக்கப்படும் ஓர் மாதாந்திர சட்டப் பத்திரிகை.

# ஸ்திரீதனம்.

## 1-ம் அத்தியாயம்.

### ஸ்திரீதனம் இன்னதென்பது.

ஸ்திரீதனமென்பதற்கு, ஒரு ஸ்திரீயைச் சேர்ந்த திரவியம் அல்லது சொத்து என்று அர்த்தமாகும். ஹிந்து சட்டப்பிரகாரம், ஸ்திரீகள் வெகுசாக தங்களிஷ்டப் பிரகாரம் சொத்துக்களை பெறவும் பராதீனம் செய்யவும் மற்றப்படி தானம் முதலியவைகளைச் செய்யவும் அதிகாரமுள்ளவர்களல்ல. ஆனால், சிற்சில சந்தர்ப்பங்களில், அவர்களுக்கு, தமக்கென்று சொந்தமாக சொத்துக்களை பெறவும் பராதீனம் முதலியவைகளைச் செய்யவும் பாத்தியதை உண்டென்றும், அந்தசொத்துக்களின்விஷயமாக அவைகளை இதரர்கள் வார்சு முறைமையில் அடையும் வகையானது ஒரு குறிப்பிட்டவிதப் பிரகாரமே அனுசரிக்கப்பட வேண்டுமென்றும் உள்ளது. ஹிந்து சட்டத்தில், ஒரு ஸ்திரீயானவள், தாம் பராதீனம் முதலியவைகளை செய்யமுடியாமல் தம்முடைய ஜீவதசை வரையிலும் அனுபவிக்க உரிமையுள்ள சொத்துக்களுக்கும், பராதீனம் முதலியவைகளை செய்வதற்கு உரித்தான சொத்துக்களுக்கும் வித்தியாசமுண்டு. முதலில் சொல்லப்பட்ட சொத்துக்களை ஒரு ஸ்திரீயானவள் தாம் அனுபவித்துக்கொண்டுவந்து இறந்தபிறகு அந்த ஸ்திரீயினுடைய புருஷனின் உத்திர வார்சுகளுக்கு சங்கரமிப்பதாகும். அத்தகைய சொத்துக்கள் ஸ்திரீ சொத்து அல்லது ஸ்திரீ ஆஸ்தி (Woman's Limited Estate) எனப்படும். ஒரு ஸ்திரீயானவள் தன்னுடைய ஜிவியகாலத்திலேயே தானம் பராதீனம் முதலியவைகளை செய்வதற்கு உரித்தான சொத்துக்கள் ஸ்திரீதனம் என்று சொல்லப்படும். எந்தெந்த சொத்துவிஷயமாக ஒரு ஸ்திரீக்கு ஒரு குறிப்பிட்ட சொத்தில் தன்னுடைய ஜீவதசைவரையிலுமாத்திரம் அனுபவிக்க பாத்தியதை உண்டென்பதையும் அந்த சொத்துகளை அனுப்பவிப்பதிலும் அல்லது அவைகளின்பேரிலுள்ள கடன்களை தீர்ப்பதிலும் இன்னும் மற்ற சௌகரியங்களை செய்துகொள்வதிலும் ஜீவதசைவரையிலு மாத்திரம் ஒரு சொத்தை அனுபவிக்க பாத்தியதை உள்ள ஒரு ஸ்திரீக்கு எவ்வளவு வரையிலும் உரிமையுண்டென்பதையும் உத்திரவார்சுகளின் முறைமை முதலியவைகளைப்பற்றி

யும் மற்றொரு வியாசத்தில் நாம் கவனிப்போம். இவ்வியாசத்தில் ஸ்திரீதனமென்பதென்ன என்பதைப்பற்றியும், ஸ்திரிதன சொத்துக்களின் விஷயமாக வார்சு முறைமையானது எப்படியென்றும், கவனிப்போம்.

ஸ்திரீதன மென்னவென்மது.

ஸ்திரீதனமென்பது, ஒரு ஸ்திரியானவள் ஒரு வார்சு முறைமையினாலாவது அல்லது பாக பிரிவினையினாலாவது பெற்ற சொத்துக்களல்லாத இதர சொத்துக்களை குறிக்கும். அப்படிப்பட்ட சொத்துகளை பாராதீனம் முதலியவைகளை செய்வதற்கு ஸ்திரீகளுக்கு பூரண உரிமையுண்டு. அப்படிப்பட்ட சொத்துக்களானது அவர்கள் இறந்த பிறகு அவர்களுடைய சொந்த வார்சுகளுக்குச்சேருவதாகும். அவை வியாபாரத்தினாலோ அல்லது பரிவர்த்தனையினாலோ அடையப்படும் சொத்துக்களையும் அணைப்பதாகும். ஸ்மிருதிகளில், உதாரணமாக மனு ஸ்மிருதி, காத்யாயன ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி, யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி, இவைகளில், பொதுவாக, விவாக காலத்திலும் இன்னும் மற்றகாலங்களிலும் தமது பெற்றோர்களிடமிருந்தும் மற்ற பந்துகளிடமிருந்து ஒரு ஸ்திரியானவள் பெறும் சொத்துக்கள் ஸ்திரீதன சொத்துக்களென்று சொல்லப்பட்டு வந்தன. உதாரணமாக மனுஸ்மிருதியில் 9வது அத்தியாயம் 194-வது சுலோகத்தில்,

“ விவாககாலத்தில் அக்னி சாக்ஷியாகவும், விவாககாலத்தில் ஊர்வலம் வரும்போதும், பிரீதியாகவும், சகோதரன் அல்லது தாயார் அல்லது தகப்பனார் இவர்களாலும் ஆகிய இம்மாதிரியாக ஆறு விதமாக ஒரு ஸ்திரிக்கு கொடுக்கப்பட்ட சொத்துக்கள் அவளைச்சேர்ந்த தனியான சொத்துக்களென்று கருதப்படும் ”

என்றுள்ளது.

நாரத ஸ்மிருதியிலும் இதே மாதிரியாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால், அதில் மேலே மூன்றாவதாகசொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் ஒரு ஸ்திரிக்கு தன்னுடைய புருஷன் கொடுத்தசொத்துக்களென்று ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. (13-வது அத்தியாயம்-8-வது சுலோகம்). யாஜ்ஞவல்க்யஸ்மிருதியில் 2-வது அத்தியாயம்144-வது சுலோகத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

“ ஒரு ஸ்திரீக்கு தம்முடைய தகப்பனாரால் கொடுக்கப்பட்ட சொத்துக்கள், தன் தாயாரால் கொடுக்கப்பட்ட சொத்துக்கள், தன்னுடைய புருஷன் அல்லது சகோதரனால் கொடுக்கப்பட்ட சொத்துக்கள், விவாக காலத்தில்

அக்னி முன்பாக கொடுக்கப்பட்ட சொத்துக்கள், அவளுடைய புருஷன் மற்றொரு ஸ்திரீயை விவாகம் செய்துக்கொள்ளும் காலத்தில் கொடுக்கும் சொத்துக்கள், அல்லது வேறே அவளால் தனியாக சம்பாதிக்கப்பட்ட சொத்துக்கள் இவை ஸ்திரி தன சொத்துக்கள் என்று சொல்லப்படும்."

மீதாக்ஷரம் என்னும் கிரந்தத்தில், மனு ஸ்மிருதியில் சொல்லப் பட்டவகைகள், உதாரணங்களாக சொல்லப்பட்டிருக்கின்றனவே யொழிய அவைகளாயே ஸ்திரீதனமென்பதானது முடிவாக குறிப் பிடப்பட்டதாக சொல்ல முடியாதென்றும் இன்னும் ஒரு ஸ்திரீக்கு பலவிதமாகவும் சொத்துக்கள் சேரலாமென்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், இப்பொழுது இந்தியாவில் பலஹைகோர்ட்டு தீர்ப்பு களினாலும், பிரிவிகௌன்சிலின் தீர்மானங்களினாலும் ஸ்திரி தனம் என்னும் பதத்திற்கு தனியாக ஒரு அர்த்தம் கொடுக்கப்பட்டு இன்ன மாதிரியாக இருந்தால் தான் ஒரு சொத்தானது ஸ்திரிதனம் என்று சொல்லப்படும் என்பதாக ஏற்பட்டுள்ளது. அதன் விவரத்தை கவ னிப்போம்.

தேவிமங்கல் vs. மஹாதேவ் (a) என்னும் பிரிவிகௌன் சில் கேசில் ஸ்திரீதனமென்று பொதுவாக ஸ்மிருதிகளில் சொல்லப்பட் டிருக்கும் சொத்தானது இரண்டு வகையாக இருக்கலாமென்றும் ஆனால், நாம் கொள்ளவேண்டிய அர்த்தமென்னவென்றால் எந்த சொத்துக்களை ஒரு ஸ்திரீ யாதொரு தடங்கல் இல்லாமல் பாரதீனம், தானம் முதலியவைகளைச் செய்வதற்கு உரிமையுண்டோ அந்தசொத் துக்கள்தான் ஸ்திரீதனமெனப்படுமென்றும், மீதாக்ஷரமென்னும்கிரந் தத்தில் ஸ்திரீதன மென்று சொல்லப்பட்டிருக்கும் சொத்துக்கள் ஒரு ஸ்திரீக்கு உள்ள எல்லாவித சொத்துக்களையும் குறிப்பதாகுமென்றும், ஆனால் ஸ்திரீதனமென்பதின் வார்சு விதாயகமானது அந்த சொத்தா னது முதலில் எம்மாதிரியாக அடையப்பெற்றதோ அதைப் பொருந் தினதாகுமென்றும், மனு ஸ்மிருதி, காத்தியாயன ஸ்மிருதி என்னும் ஸ்மிருதிகளில் ஸ்திரீ தனம் என்பது எவ்வாறு என்று விவரிக்கப்பட் டுள்ளதோ அத்தகைய தன்மையுள்ளவை தான் ஸ்திரீதனம் என்று கருதப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கோர்ட்டுகள், முடிவாக, ஒரு ஸ்திரீயானவள் வார்சு முறையி னாலாவது அல்லது பாகப் பிரிவினையினாலாவது, அடைந்த சொத்

(a) 31. All. 234.

துக்கள் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களல்லவென்று தீர்மானித்திருக்கின்றன.

ஆனால், சிற்சிலசமயங்களில், ஸ்திரீதனமென்னும் சொத்தானது எந்த சொத்துக்களின்பேரில் ஒரு ஸ்திரீக்கு விற்பதற்கும் மற்றப்படி பாதீனம் செய்வதற்கும் பூரண பாத்தியதையுண்டோ அத்தகைய சொத்துக்களெல்லாவற்றையும் குறிப்பதாகுமென்று சொல்லப்படுகிறது. அதுவும் சரியல்ல. உதாரணமாக ஒருஸ்திரீக்கு அவள் ஒரு வார்சு ஹேறாதாவில் பெற்ற வரும்படியை தன்னிஷ்டப் பிரகாரம் பாதீனம் செய்வதற்கு உரிமை யுண்டு. ஆனால், அதனாலேயே அந்த வரும்படியானது அவளுடைய ஸ்திரீதன சொத்தென்று சொல்லப்பட முடியாது. ஏனென்றால், அவள் ஒரு வார்சு ஹேறாதாவில் பெற்ற சொத்துக்கள் அவளுடைய ஜீவிய காலத்திற்குப் பிறகு அவள் புருஷனுடைய வார்சுகளுக்குச் சேருவதாகும். தாம் உயிரோடிருக்கையில் எந்த சொத்துக்களை யாதொரு தடை அல்லது நிபந்தனை இல்லாமல் சர்வ சுதந்திரத்துடன் பாதீனம் செய்ய முடியுமோ அப்படிப்பட்ட சொத்தாயிருந்து அவளுடைய காலத்திற்குப் பிறகு அவளுடைய ஸ்திரீதன வார்சுகளுக்கு சங்கரமிப்பதாக இருக்கும் சொத்துக்கள் தான் ஸ்திரீதனமென்று சொல்லப்படும். பூகர்சிங் VS. ராம்ஜிட்சிங் (a). ஆகையால் அடியில்கண்ட சொத்துக்கள் ஸ்திரீதனமென்று ஏற்பட்டுள்ளது.

(1) விவாக காலத்தில் கொடுக்கப்படும் வெகுமதிகள் (காத்யாயனர்.)

(2) மாமனாராலும், மாமியாராலும் இன்னும் மற்ற பெரியோராலும் அன்பினால் கொடுக்கப்படும் சொத்துக்கள்.

(3) தகப்பனார், தாயார், சகோதரர், புருஷன், அல்லது புருஷனுடைய பந்துக்கள், இவர்களால் தானமாக கொடுக்கப்படும் சொத்துக்கள்.

ஆனால், இந்த வகைப்பட்ட சொத்துக்களைத்தவிற வேறே சொத்துக்கள் ஸ்திரீதன சொத்துக்களென சொல்லக்கூடாதென்றும் சொல்வதற்குமில்லை. ஆகையால், ஒரு ஸ்திரீயானவள் தன்னுடைய சொந்த பிரயத்தனத்தினாலாவது அல்லது சாமர்த்தியத்தினாலாவது,

(a) 1. All 661.

அடைந்த சொத்துக்கள் ஸ்திரீதன சொத்துக்களென சொல்லப்பட்டுள்ளன. சுப்பிரமணியம் vs. அருணாசலம் (a) என்னும் கேஸில் இம்மாதிரியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு ஸ்திரீ நீடித்த சுவாதீன விரோத அனுபவத்தினால் யாதொரு சொத்தை கைப்பற்றிருப்பாளாகில் அந்த சொத்தானது அவளுடைய ஸ்திரீதனமாகுமென்பதற்கு காந்தாய் vs. அமேரி (b) என்னும் கேஸானது ஒரு ஆதாரமாகும். ஒரு மனைவிக்கு, அவளுடைய புருஷன் சில சொத்துக்களை பூரணமாக தானமென்றாவது அல்லது வேறே யாதொருவிதமாகவாவது அந்த சொத்துக்களில் சர்வ சுதந்திரமாக விற்பனை ஒத்தி, பந்தகம், முதலிய பராதீனங்களுக்கு உரியனவாக பாவித்து கொடுத்துவிடும் பக்ஷத்தில் அந்த சொத்தானது அம்மனைவியின் ஸ்திரீதன சொத்துக்களென கவனிக்கப்படுமென்று தாக்ரோ vs. கெங்கா (c) என்னும் கேஸில் சொல்லப்பட்டுள்ளது. அதே மாதிரியாக ஒரு ஸ்திரீக்கு சேரவேண்டியதாக யிருக்கும் ஜீவனாம்ச பாக்கி தொகைகள் அவளுடைய ஸ்திரீதன மெனப்படுமென்று கோர்ட் ஆப்வார்ட்ஸ் vs. மஹேஸ்வர் (d) என்னும் கேஸில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், பொதுவாக ஒரு ஸ்திரீயினிடத்தில் யாதொரு சொத்திருக்குமானால் அந்த சொத்தானது அவளுடைய ஸ்திரீ தனம் என்று யாதொரு அனுமானமும் ஏற்படாது. பகவன்தீன் vs, மயினாபாய் (f). என்னும் கேஸுகளைப் பார்க்க.

**எவை ஸ்திரீதன மல்லவென்பது.**

மீதாக்ஷரமென்னும் கிரந்தத்தில் என்ன சொல்லப்பட்டிருந்த போதிலும் வார்சு முறைமையில் அல்லது வார்சு ஹோதாவில் ஒரு ஸ்திரீ பெறும் சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீ தன சொத்துக்களென்று கவனிக்கப்படமாட்டா. தேவிமங்கல் vs. மஹாதேவ் (g) ஒரு ஸ்திரீயானவள் ஒரு ஆணுக்காவது அல்லது மற்றொரு ஸ்திரீக்காவது அல்லது தன்னுடைய புருஷன் அல்லது வேறே பந்துக்க

(a) 28. Mad. 1. (F. B.)
(b) 32. All. 189.
(c) 10. All. 187. (P. C.)
(d) 16. W. R. 76.
(e) 11. M. I. A. 139.
(f) 11. M. I. A. 487.
(g) 34. All. 234. (P. C.)

ளுக்காவது வார்சாக இருந்து அவர்களுடைய காலத்திற்குப் பிறகு ஏதாவது சொத்துக்களை பெறுவாளாகில் அந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களென்று கவனிக்கப்படமாட்டாது. இம்மாதிரியாக தேவிமங்கல் VS. மஹாதேவ் (a) என்னும் கேஸிலும், சிவசங்கர் VS. தேவிசாஹே (b) என்னும் கேஸிலும், சிவப்ரதாப் VS. அலஹாபாத் பாங்க் (c) என்னும் கேஸிலும், வீர கங்கப்பா VS. ருத்ரப்பா (d) என்னும் கேஸிலும், சூரியடு VS அனுமானய்ய (e) என்னும் கேஸிலும், சொல்லப்பட்டுள்ளது. ஒரு சொத்தானது ஸ்திரீதனமா அல்லவா என்பதை கவனிக்குமிடத்து அந்த சொத்து அசையும் பொருளா இருந்தாலும் அல்லது அசையாப் பொருளாக இருந்தாலும் அதனால் யாதொரு பேரம் ஏற்படாது. சந்தன் VS. இஷ்ரீ (f) என்னும் கேஸைப் பார்க்க, ஒரு விவாகமாகாத பெண் தன்னுடைய தாயாரின் ஸ்திரீ தனத்தை வார்சு முறைமையில் பெறுவாளாகில் அந்த சொத்தானது அவளுடைய ஸ்திரீதன சொத்தென்று ஏற்படாது. சூரியடு VS. அனுமானய்யா (e) என்றும் கேஸை பார்க்க.

ஒரு ஸ்திரீ தன்னுடைய தகப்பனுருக்கு அல்லது புருஷனுக்கு ஒரு வார்சாகப்பெற்ற சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்க ளென்று சொல்லப்படாது. ஒரு விதந்து தன்னுடைய ஸ்வாதீனத்தி லுள்ளதும் தாம் ஜீவிய காலம் வரையிலும் அனுபவிக்க உரிமைபட்டதுமான சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வரும்படியானது அவளுடைய ஸ்திரீதன சொத்தல்ல. ஆகையால், அந்த சொத்துக்கள் அவளுடைய ஜீவிய காலத்திலேயே எவ்விதமாகவாவது செலவிடப்படாமலிருக்கும் பக்ஷத்தில் அவளுடைய காலத்திற்குப் பிறகு அவளுடைய புருஷனைச் சேர்ந்த உத்திரவார்சுகளுக்கு மூல ஆஸ்தியோடு சேருவதாகும். சுப்பராவ் VS. கோபாலா. (g)

---

(a) 34. All. 234. (P. C.)
(b) 25. All. 468. (P. C.)
(c) 25. All. 476. (P. C.)
(d) 19. Mad. 110.
(e) 32. Mad. 521.
(f) 1884. A. W. N. 67.
(g) 31. Mad. 321.

ஒரு ஸ்திரீதன சொத்தை அதன் சொந்தக்காரர் தாம் உயிரோடிருக்கும் காலத்திலேயே ஒரு தான மூலமாகவாவது அல்லது உயில் மூலமாகவாவது பராதீனம் செய்யலாம். ஆனால், அதனாலேயே அந்த சொத்துக்களை பெறுபவர்கள் அந்த ஸ்திரீக்குள்ள சகல பாத்தியதைகளையும் அடைவதாக ஏற்படாது. அந்த சொத்துக்களை பெறுபவருடைய பாலைப் பொறுத்ததாகும். அப்படி சொத்துக்களை பெறுபவர் ஒரு ஆணாக இருப்பின் அவருக்கு அவளுடைய எல்லா உரிமைகளும் சங்கரமிக்கும். பெண்ணாக இருப்பின், ஹிந்து சட்டப் பிரகாரம் அவளுக்கு தம்முடைய ஜீவ தசை வரையிலும் தான் அந்த சொத்துக்களை அனுபவிப்பதற்கு பாத்தியதை யுண்டு. இதைப்பற்றி பின்வரும் அத்தியாயங்களில் விவரமாக கவனிப்போம்.

## 2-ம் அத்தியாயம்.

### என்னென்ன சொத்துக்கள் ஸ்திரீ தன சொத்துக்களெனப்படும்.

அடியில் கண்ட சொத்துக்கள், ஸ்திரீதன சொத்துக்களென்று கவனிக்கப்பட்டு வருகின்றன.

(1) ஸ்திரீகள் வார்சுகளுடைய ஹோதாவில், ஜீவ தசை வரையிலும் அனுபவிக்கும்படியாக உள்ள சொத்துக்களிலிருந்து ஏற்படும் வருமானமும் அந்த வருமானத்தில் மீரும் தொகையும். ஆனால், அப்படிப்பட்ட வருமானம் அல்லது அதில் மீரும் தொகையானது மூல சொத்தின் ஒரு பாகமாக கருதப்பட்டிருக்கக் கூடாது.

(2) ஒரு ஈகைப் பத்திரம், அல்லது ஈகை, அல்லது தானம், அல்லது பராதீனம், இவைகள் மூலமாக ஒரு பந்துவினிடமாவது, அல்லது வேறே ஒரு அயல் நபரிடமிருந்தாவது சர்வ சுதந்திர பாத்தியதைகளுடன் பெறப்படும் சொத்துக்கள்.

(3) ஒரு ஸ்திரீக்கு ஜீவனாம்சத்திற்கென்று அல்லது ஜீவனாம்சத்திற்கு பதிலா கொடுக்கப்பட்ட சொத்துக்கள்.

(4) மேலே மூன்றாவதாக சொல்லப்பட்ட சொத்துக்களினால் வாங்கப்பட்ட சொத்துக்களும் அதனுடன்சேர்ந்த சொத்துக்களும்.

(5) நீடித்த விரோத சுவாதீன அனுபவத்தினால் சொந்தமாக அடையப்பட்ட சொத்துக்கள்.

(6) ஒரு ஸ்திரீ தன்னுடைய சொந்த தேக பலத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் சுயார்ஜிதமாக அடையும் சொத்துக்கள்.

(7) விவாக காலத்தில் பரிசு அல்லது வெகுமானமாக கொடுக்கப்படும் சொத்துக்கள். உதாரணமாக (i) யௌதகம் (ii) சுல்கம். யௌதகம் என்பது இருவகைப்பட்டதாகும். அதாவது அக்யக்னிக ஸ்திரீதன மென்றும் அத்தியவாகநீக ஸ்திரீதன மென்றும் இரண்டு வகையானதாகும்.

சுல்கமென்பதானது பரியமென்றும் சொல்லப்படும்.

(8) அதிவேதனீகம். அதாவது ஒரு ஸ்திரீக்கு அவளுடைய புருஷன் மற்றொரு ஸ்திரீயை விவாகம் செய்துக்கொள்ளும் காலத்தில் மன திருப்திக்காக கொடுக்கும் சொத்துக்கள்.

(9) அன்வதேயகம். அதாவது ஒரு ஸ்திரீயினுடைய விவாகத்திற்கு பிறகு அவளுடைய பந்துக்களாவது அல்லது அவளுடைய புருஷனைச் சேர்ந்த பந்துக்களாவது கொடுத்த வெகுமானங்கள்.

இனி, மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு விதமான சொத்துக்களைப்பற்றி தீர்மானங்கள் எவ்வாறு கூறி இருக்கின்றன என்பதைப் பற்றி கவனிப்போம்.

1. ஸ்திரீகள் வார்சுகளுடைய ஹோதாவில் ஜீவதசை வரையிலும் அனுபவிக்கும்படியாக உள்ள சொத்துக்களிலிருந்து ஏற்படும் வருமானமும் அந்த வருமானத்தில் மீரும் தொகையும். ஆனால், அப்படிப்பட்ட வருமானம் அல்லது அதில் மீரும் தொகையானது மூல சொத்தின் ஒரு பாகமாக கருதப்பட்டிருக்கக் கூடாது.

ஒரு சொத்தை அனுபவிப்பதற்கு ஒரு ஸ்திரீக்கு உரிமையுள்ளதாக ஏற்படுமானால், அந்த சொத்தின் வரும்படியும் அவளுக்கே சொந்தமாகுமென்று ஏற்படும். அந்த வரும்படியை தன் ஜீவிய காலத்திற்குள்ளேயே வினியோகம் பண்ணுவதற்கு உரிமை இருக்குமானால் அதே வரும்படியை மீத்தி வைக்கவும் தன்னுடைய காலத்திற்கு பிறகு மற்றொருவருக்கு கொடுக்கவும் உரிமை ஏற்பட வேண்டும். 1883-ம் வருஷத்தில் இஸ்ரீடட் vs. ஹான்ஸ்பத்தி (a) என்னும் கேஸில் ப்ரிவிகௌன்ஸில் கோர்ட்டாரவர்கள், ஒரு ஸ்திரீ தாம் ஜீவிய காலம் வரையிலும் அனுபவிப்பதற்காக பெற்றுக்கொண்டிருக்கும்

(a) 10. Cal. 324. P. C.

சொத்துக்களிலிருந்து வரும் வரும்படியை தன்னிஷ்டப் பிரகாரம் பராதீனம் செய்யலாமென்று சொல்லி இருக்கின்றனர். ஆனால், முக்கியமாக இப்படிப்பட்ட கேசுகளில் கவனிக்க வேண்டிய அம்சமென்னவென்றால், ஒரு ஸ்திரீயானவள் தாம் அனுபவித்துக்கொண்டு வரும் சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தை எப்படி கவனித்து வந்தாள், அதாவது மூல ஆஸ்தியின் ஒரு பாகமாக இருக்க வேண்டுமென்று கவனித்து வந்தாளா அல்லது அதை தன்னுடைய சொந்த ஆஸ்தி என்று கவனித்து வந்தாளா என்பது. அவள் அந்த அந்த வரும்படியானது தன் புருஷனுடைய ஆஸ்தியைச் சேர்ந்ததென்று கவனித்து வருவாளாகில் அந்த வரும்படியானது ஸ்திரீதன சொத்துக்களென கவனிக்கப்படாது. ஆனால் அதை தம்முடைய சொத்தென்றும் அதில் தமக்கு சர்வ சுதந்திர பாத்தியதை யுண்டென்று கவனித்து வந்து அதை தனிபாக பாராட்டி வருவாளாகில் அந்த சொத்தானது அவளுடைய ஸ்திரீதன சொத்தென்று கருதப்படும். பகவதீ vs. சொஹோத்ரா என்னும் கேசில் (b) பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது: "இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முக்கியமான பரிக்ஷாம்சம் என்னவென்றால் சுற்றிலுமுள்ள நடத்தையும் நடவடிக்கைகளையும் கவனித்து ஒரு ஸ்திரீ தாமாக சேமித்து வைத்த சொத்தை மூல ஆஸ்தியின் பாகமாக இருக்கவேண்டுமென்று நினைத்தாளா அல்லது தன்னுடைய சொந்த ஆஸ்தி என்று நினைத்தாளா என்பதை அறியவேண்டும்."

ஆனால், இப்பொழுது, முக்கியமாக சென்னை ஹைக்கோர்ட்டில் பல கேசுகளில் ஒரு ஸ்திரீயானவள் தன் மூல ஆஸ்தியின் வரும்படியிலிருந்து ஜீவன செலவுகளுக்கு போக மீதிதொகைகளை சேர்த்துவைத்திருந்தால் அவை அவருடைய ஸ்திரீதன தொகையாக கருதப்படுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சுப்பரமணியம் vs. அருணாசலம், (b) அக்கன்ன vs. அங்கய்ய (c) என்னும் கேசுகளைப் பார்க்க. அப்படிப்பட்ட சொத்துக்களை ஒரு ஸ்திரீ ஒரு உயில் மூலமாகவாவது அல்லது தானபத்திர மூலமாகவாவது பராதீனம் செய்யலாமென்று மேலே சுப்பரமணியம் vs. அருணாசலம் என்னும் கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(a) 16. C. W. N. 834.
(b) 28. Mad. 1.
(c) 25. Mad. 351.

ஒரு பிரிவிகௌன்ஸில் கேஸில் பின் கூறப்பட்டுள்ள சங்கதி அம்சங்களின்பேரில் பின் வருமாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஸ்திரீ தான் ஜீவ தசை வரையிலும் அனுபவிக்க பாத்தியதையுள்ளசொத்திலிருந்து வந்த வருமானத்தை மீத்திக்கொண்டேவந்து அந்த பணத்திலிருந்து நிலங்களை வாங்கினாள். அதை மற்றொருவருக்கு விற்றுவிட்டாள். அவளுடைய காலத்திற்குப் பிறகு அவளுடைய உத்திர வார்சுதாரர் அந்த சொத்தை கிரயம் பெற்றவர்பேரில் தாவா செய்து அவர் கிரயம் பெற்ற சொத்தானது மூல ஆஸ்தியைச் சேர்ந்ததென்று வற்புறுத்தினர். பிரிவி கௌன்ஸில் கோர்ட்டாரவர்கள் அந்த ஸ்திரீ அந்த சொத்துக்களை தன்னுடைய சொந்த சொத்தென்று பாவித்து கிரயம் செய்ததாக ருசு ஏற்படும்பக்ஷத்தில் உத்திர வார்சுதாரர் தாவா செய்ய நியாயமில்லை என்று தீர்மானித்திருக்கின்றனர். அந்த கேஸில் ப்ரிவி கௌன்ஸில் கோர்ட்டார் அந்த ஸ்திரி விக்கிரயம் செய்யும் காலத்தில் விக்கிரயத்திற்கு ஏதோ அவசியமிருந்ததாக எழுதி இருக்கிறதினாலேயே தமக்கு அவைகளில் பூரண அதிகாரம் இல்லாததுபோல் நினைத்ததாகவும் அதனால் உத்தர வார்சுதாருக்கு அவைகளைக் கைப்பற்ற தாவா செய்ய உரிமையுண்டு என்று தெரிவித்திருக்கின்றனர். நபகிஷோர் vs. உபேந்திரகிஷோர் (a) என்னும் கேசைப் பார்க்க.

சென்னை ஹைக்கோர்ட்டில், பார்த்தசாரதி vs. வெங்கடாத்ரி (b) என்னும் கேசிலும் ஐயேஸ்வர அய்யா vs. சிவாஜி (c) என்னும் கேசிலும் ராமநாதபுரம் ராஜா vs. சுந்தரம் (d) என்னும் கேசிலும் ஒரு ஸ்திரீ தன் ஜீவிய காலம் வரையிலும் பாத்தியதைப் பெற்றிருக்கும் சொத்துக்களிலிருந்து மீத்தி வைக்கப்பட்டிருக்கும் வரும்படியினால் வாங்கப்பட்ட சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதனமென்றும் உத்திரவார்சுதாரர்கள் அந்த சொத்துக்கள் மூல ஆஸ்தியைச் சேர்ந்த சொத்துக்களென்று ருசு செய்தாலொழிய அவளுடைய ஸ்திரீ தன வார்சுகளுக்கே சேருவதாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

---

(a) 65. I C. 305.
(b) 46. Mad. 190.
(c) 49. Mad. 116.
(d) 42. Mad. 581. P. C.

(2) ஒரு ஈகைப்பத்திரம், அல்லது ஈகை, அல்லது தானம், அல்லது பராதீனம் இவைகளின் மூலமாக ஒரு பந்துவினிடமாவது அல்லது வேறே ஒரு அயல் நபரிடமிருந்தாவது சர்வ சுதந்தர பாத்தியதைகளுடன் பெறப்படும் சொத்துக்கள்.

ஒரு ஸ்திரீ தன் புருஷனிடமிருந்து ஒரு ஈகைப்பத்திரம் அல்லது தான மூலமாகவாவது பெறும் சொத்துக்களும், தன் புருஷனுடைய பந்துக்களிடமிருந்தாவது அல்லது தன் பந்துக்களிடமிருந்தாவது ஈகைப் பத்திரம் மூலமாக அல்லது தானமாக பெறும் சொத்துக்களும் அவளுடைய ஸ்திரீதனம் என்று சொல்லப்படும். (a). அதே மாதிரி ஒரு ஸ்திரீ ஒரு அயல் நபரிடமிருந்து சர்வ சுதந்தர பாத்தியதைகளுடன் பெறும் சொத்துகளும் அவளுடைய ஸ்திரீ தனம் என்று சொல்லப்படும். (b).

நாரத ஸ்மிருதி.—"ஒரு ஸ்திரீ தனது பிரியமுள்ள புருஷனுல் கொடுக்கப்பட்டவைகளை தன் புருஷன் இறந்த பிறகு, அவை அசையாப் பொருளாயிருந்தா லொழிய மற்றவைகளை தமது இஷ்டப் பிரகாரம் செலவழிக்கலாம்."

வியாஸ ஸ்மிருதி.—"ஒரு ஸ்திரீ தன் புருஷனிடமிருந்து பெற்றவைகளை தமது இஷ்டப் பிரகாரம் செலவிடலாம்."

ஸ்மிருதிகளில், ஒரு ஸ்திரீ தானம் முதலிய வழிகளால் அடைத்திருக்கும் அசையும் பொருளைப்பற்றி சொல்லப்பட்டிருந்தபோதிலும், ஹைகோர்ட்டு தீர்மானங்களினுல் தன் புருஷன், தகப்பனுர், தாயார், மகன், சகோதரர், முதலியவர்களிடமிருந்து பெறும் அசையாப் பொருள்களும் ஸ்திரீ தனம் என்று ஏற்பட்டிருக்கிறது.

ஒரு விதந்துவுக்கு அவளுடைய காலஞ் சென்ற புருஷனின் சகோதரர்களுக்குள் பாக பிரிவினை ஏற்படும் காலத்தில் அவள் சர்வ சுதந்திய பாத்தியதைகளுடன் சில சொத்துக்களை அடைந்து அனுபவிக்க வேண்டுமென்று, குடும்ப சொத்தில் ஒரு பாகம் கொடுக்கப்பட்டது. அந்த சொத்தானது அவளுடைய ஸ்திரீதனம் என்று தீர்மானிக்கப்பட்டது. (c)

---

(a) ஹிதேந்திரசிங் vs. ராமேஸ்வர் 4. Patna. 510.
(b) முத்துகருப்ப vs. செல்லத்தம்மாள் 39. Mad. 298.
(c) அலமேலு vs. நம்பெருமாள் 15. M. L. J. 352.

ஒரு ஸ்திரீக்கு தன்னுடைய புருஷன் அல்லது புருஷனுடைய பந்துக்கள் அல்லது தன்னுடைய பந்துக்கள் இவர்கள் ஒரு ஈகைப் பத்திரம் (செட்டில்மெண்டு பத்திரமென்று சொல்வதுமுண்டு) தானம் இவை மூலமாக கொடுக்கும் சொத்துக்களுக்கு சௌதாயகம் என்று பெயர். இப்படிப்பட்ட சொத்துக்களை அவள் உயிருடன் இருக்கும் போதும் அல்லது உயில் மூலமாகவும் தானம் அல்லது வேறே வித மான பராதீனம் செய்யலாம்.

பெண் வார்சுகளால், வார்சு ஹோதாவில் பெறப்படும் ஸ்திரீ தன சொத்துக்கள் அவர்களுடைய ஸ்திரீ தன சொத்துக்கள் என்று சொல்லப்படாது. ஹிந்து சட்டப் பிரகாரம் பெண் வார்சுகள் தமக்கு கிடைக்கும் சொத்துக்களில் ஜீவ தசை வரையிலுமாத்திரம் அனுபவ உரிமைபெற்றவர்களாவார்கள். உதாரணமாக ஒருஸ்திரீயின் ஸ்திரீ தன சொத்துக்களை அவளுடைய மகள், அவளுடைய காலத்தின் பிறகு வார்சு ஹோதாவில் அடைவாளாகில் அந்த சொத்துக்கள் மக ளிடத்தில் ஸ்திரீ தன சொத்தாக ஏற்படாது. ஆகையால் அவை அம்மகளின் உத்தரவார்சுகளுக்கு (தகப்பனாரின் சபிண்டர்களுக்கு) ச் சேருவதாகும்.

விபசாரத்தினால் கிடைத்த சொத்துக்கள் ஸ்திரீ தனமா அல் லவா என்னும் கேள்விக்கு கல்கத்தா ஹைக்கோர்ட்டார் ஹீராலால் vs. திரிபுர (a) என்னும் கேசிலும் சென்னை ஹைக்கோர்ட்டார் மங் தாம் vs. மங்தாம் (b) என்னும் கேசிலும் அவை ஸ்திரீ தனம் தான் என்று பதில் அளித்திருக்கின்றனர்.

(3) ஒரு ஸ்திரீக்கு ஜீவனாம்சத்திற்கென்று அல்லது ஜீவனாம்சத் திற்குப் பதிலாக கொடுக்கப்பட்ட சொத்துக்கள்.

ஒரு ஸ்திரீக்கு ஜீவனாம்சத்திற்காக அல்லது ஜீவனாம்சத்திற்குப் பதிலாக கொடுக்கப்பட்ட சொத்துக்கள் ஸ்திரீ தன சொத்துக்கள் என்று சொல்லப்படும். ஆனால் ஒரு குடும்பத்தில் நடக்கும் பாக பிரி வினையில் ஒரு மனைவிக்கு கொடுக்கும் சொத்தாவது அல்லது ஒரு விதந்துவுக்கு ஜீவனாம்சத்திற்கென்று அல்லது ஜீவனாம்சத்திற்கு பதி லாக கொடுக்கப்பட்ட சொத்தாவது ஸ்திரீ தன சொத்துக்களென்று சொல்லப்படாது. ஒரு விதந்துவுக்குச் சேரவேண்டியதாயிருக்கும்

(a) 40 Cal. 50.
(b) 24. M. L. J. 223.

ஜீவனும்ச தொகையானது அவள் இறக்கும் காலத்தில் பாகிக்யா யிருக்குமானல் அந்த தொகை மூல தன ஆஸ்தியைச் சேராது. அது அவளுடைய ஸ்திரீ தன வார்சுகளுக்குத் தான் சேரும். அதே மாதிரி ஒரு விதந்து தன்னுடைய ஜீவனும்ச தொகையிலிருந்து கிரயமாக வாங்கும் சொத்துக்கள் அவளுடைய சொந்த சொத்துக்களென்றே பாவிக்கப்படும். (a). ஒரு விதந்துவுக்கு ஜீவனும்சத்திற்குப் பதிலாக அவள் சர்வ சுதந்தர பாத்தியதையுடன் உபயோகிக்கும்படியாக அவளுடைய புருஷனின் குடும்பத்திலிருந்து ஒரு தொகை கொடுக்கப்பட்டது. அந்த தொகை அவளுடைய ஸ்திரீதனத் தொகை யென்று தீர்மானிக்கப்பட்டது (b). காத்யாயன ஸ்மிருதி பிரகாரம் ஒரு ஸ்திரீக்கு விவாகமாகாததற்கு முன் அவளுடைய தகப்பனர் உயில் மூலமாகக் கொடுக்கும் சொத்தானது அவளுடைய ஸ்திரீதனம் என்றுள்ளது. அதே மாதிரியாக முத்து vs. செல்லத்தம்மாள் (c) என்னும் கேசிலும் ஜானகி செட்டி vs. மிரியாலா (d) என்னும் கேசிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(4) ஜீவனும்சத்திற்கென்று அல்லது ஜீவனும்சத்திற்குப் பதிலாக கொடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து மீத்து வைக்கப்பட்ட சொத்துக்களும் அவைகளினல் கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்களும்.

ஸ்திரீதன சொத்துக்களுடன் அவைகளால் விருத்திசெய்வதினல் ஏற்படும் சொத்துக்கள் சேர்க்கப்பட்டாலும் அந்த சொத்துக்களும் ஸ்திரீதன சொத்துக்களென்று சொல்லப்படும். (e)

(5) நீடித்த விரோத சுவாதீன அனுபவத்தினல் சொந்தமாக அடையப்பட்ட சொத்துக்கள்.

சாதாரணமாக ஒரு நபர் நீடித்த விரோத சுவாதீன அனுபவத்தினல் ஒரு சொத்தை சொந்தமாக அடைவதென்பது பொதுவான சட்டமாகும். அதற்கும் ஹிந்து சட்டத்திற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. ஆகையால் மற்ற நபர்களைப்போல ஒரு ஹிந்து ஸ்திரீயும் நீடித்த விரோத சுவாதீன அனுபவத்தினல் ஒரு சொத்தை

(a) பெல்லிசாரி vs. செந்தாமரை 8. I. C. 385.
(b) சந்திரநாத் vs. ராம்ஜெய். 6. B. L. R. 303.
(c) 26. I. C. 785.
(d) 32. Mad. 521.
(e) வெங்கட vs வெங்கட 2. Mad. 333.

சொந்தமாகப் பெறலாம். ஒரு ஸ்திரீ (விதந்து) தம்முடைய உத்தா வார்சுகளுக்கு விரோதமாகவும் ஷெடி சுவாதீன அனுபவம் பெறலாம். ஆனல், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் என்ன முக்கியமானதோர் கேள்வியாகுமென்ருல், அந்த ஸ்திரீ தன்னுடைய புருஷனின் ஆஸ்தியையொட்டி அத்தகையதோர் சுவாதீனத்தைப்பெற்ருளா அல்லது தன்னுடைய சொந்த உரிமையில் அதை பெற்ருளா என்பதாகும். சாதாரண அனுமான மென்னவென்ருல், அவள் தன் புருஷனுடைய ஆஸ்தியை யொட்டியே அப்படி சுவாதீனம் பெற்றிருப்பதாகவும் அவைகளைப் பற்றின பாத்தியதை அவளுக்குப் பிறகு அவளுடைய உத்திரவார்சுகளுக்கு சங்கரமிப்பதாகவும் ஏற்படும். ஆனல், அவளாவது அவளுடைய ஸ்திரிதன வார்சுகளாவது அப்படிப்பட்ட அனுமானத்தை பிரதிவாதிக்கலாம் (a). மற்ருெரு கேசில் பிரீவி கௌன்சில் கோர்ட்டாரவர்கள் ஒரு ஸ்திரீ, யாதொரு சொத்தை, அதன் உண்மையான உரிமையுள்ள வார்சுகளை நீக்கி சுவாதீனம் பெற்றிருப்பதே அவர்களுக்கு விரோதமாக சுவாதீனம் பெற்றிருப்பதாக கவனிக்க வேண்டுமென்றும் அப்படி அவள் சுவாதீனம் செய்துக்கொண்டிருப்பது தங்களுக்கு விரோதமானதல்லவென்று மேல் சொல்லப்பட்ட வார்சுகளே ருசு செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிருர்கள் (b). ஒரு விதந்து ஜாயிண்டு குடும்ப ஆஸ்திகளின் ஒரு பாகத்தை ஜீவனம்சத்திற்கு பதிலாக சுவாதீனம் பெற்றிருப்பதே மற்ற குடும்ப அங்கத்தினருக்கு விரோதமாக சுவாதீனம் பெற்றிருப்பதாக ஏற்படாது (c), ஆனல், அவள் தமக்கு அந்த சொத்துக்களில் பூரண பாத்தியதை யுண்டென்று சொல்லி அப்படியே அனுபவித்து வந்து அவ்வனுபோகத்தை மற்ற அங்கத்தினருக்கு விரோதமாக இருக்கச்செய்து விடலாம் (d). ஒருவிதந்து தன்னுடைய புருஷனுக்கு வார்சு என்று ஹோதாவில் ஒரு ஆஸ்தியை அடைந்து அனுபவத்திலேயே அவளுக்கு சங்கிரமிக்கும் உரிமைகள் குறைவுள்ளதாகவே எப்போதும் கருதப்படாது. ஆனல், அவள் சாதாரணமாக நீடித்த விரோத சுவாதீன அனுபோகத்தினல் அடையும் ஆஸ்திகளும் தம்புருஷனுடைய ஆஸ்தியைச் சேர்ந்ததாகவே கவனிக்கப்படும்.

(a) சுராஜ்பல்லி vs. தில்லக்தாரி 7. Pat. 163.
(b) ஜ்வலபக்ஷ் vs. தரோணிசிங் 10. M. I. A. 511.
(c) பகவானிக்வார் vs. மோஹனசிங் 88. I. C. 385.
(d) பகவான்தீன் vs. அச்சுதய்ய 87. I. C. 1021.

அதாவது அப்படிப்பட்ட ஆஸ்தியானது அதனாலேயே அவளுடைய ஸ்திரீதன சொத்தென்று கவனிக்கப்படாது (a). ஆனால், இது அவ் விதந்துவைச் சேர்ந்த வரைக்கும் ஒரு அனுமானமே யொழிய சங்கதி அம்சங்களினால் அவ்வனுமானமானது மறுக்கப்படலாம். அதாவது நீடித்த விரோத சுவாதீன அனுபவத்தினால் ஒரு சொத்தை ஒருவிதந்து வானவள் தாம் பூரண பாத்தியதைகளுடன் பெற்றுவிட்டதாக ருசு செய்யலாம். ஒரு விதந்து தன்னுடைய புருஷனின் உத்திர வார்சுக ளுக்கு விரோதமாக நீடித்த சுவாதீன அனுபோகத்தினால் யாதொரு சொத்தை சுவாதீனப்படுத்திக் கொள்வாளாகில் அது உடனே அவ ளுடைய ஸ்திரீதனமாய் விடுகின்றது (b). ஆனால் மற்ற நபர்களுக்கு விரோதமாக அவள் சுவாதீனம் பெற்றிருப்பின் எம்மாதிரியான எண் ணத்துடன் அந்த சொத்துக்களை அனுபவித்து வந்தாள் என்றும் தன்னுடைய சொந்த சம்பாத்தியமென்று கவனித்து வந்தாளா அல்லது தாம் ஜீவதசை வரையிலும் அனுபவிக்கும்படியாக விருந்த ஆஸ்தியில் ஓர் பாகமாக கவனித்து வந்தாளா என்பதும் முக்கியமான தாகும். ஒரு கேசில் பின் வருமாறு தீர்மானிக்கப்பட்டது. இரண்டு சகோதரர்கள், ஜாயிண்டாக இருந்து வந்ததில் ஒருவர் இறந்தார். அவருக்கு ஒரு மனைவி இருந்தாள் இரண்டு வாரம் கழிந்தபிறகு மற் றொரு சகோதரர் இறந்தார். அவருக்கு வார்சு அவருடைய தாயார். ஆனால், மொத்த ஆஸ்திகளையும் முதலில் இறந்த சகோதரருடைய மனைவியானவள் தன்னுடைய மாமியாருக்கு விரோதமாக 12-வரு ஷங்களுக்கு மேலாக அனுபவித்து வந்தாள். அந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதனமாக ஆகிவிட்டதென்றும் அவளுடைய காலத் திற்கு பிறகு அவை அவளுடைய ஸ்திரீதன வார்சுகளுக்குச் சேரு மென்றும் தீர்மானிக்கப்பட்டது (c). மற்றொரு கேசில் ஒரு மரு மகள் தன்னுடைய மாமனார் இறந்தபிறகு தன் மாமியாருக்கு விரோ தமாகவும் தன்மைத்துனனுடைய மகனுக்கு விரோதமாகவும் மொத்த ஆஸ்திகளையும் சொந்தமாக அனுபவித்து வந்தாள். 12-வருஷ கால மான பிறகு அந்த ஆஸ்திகள் அனைத்தும் அவளுடைய ஸ்திரீதன மாக ஏற்பட்டு விட்டதாக கவனிக்கப்பட்டது (d).

---

(a) ஜகன்மோகன் vs. பிரயாக் 87. I. C. 473.

(b) சேகரா vs. ராமராஜு 86 I. C. 296.

(c) மக்ளி vs. லட்ளி 13 I. C. 644.

(d) கண்ணிராம் vs. ஹம்பிரி 32. All, 189.

(6) சொந்த பிரயத்தனத்தினுல் சம்பாதிக்கப்பட்ட சொத்துகள்.

ஒரு ஸ்திரீ தன்னுடைய சம்பாத்தியத்தினுலும் தேக கஷ்டத்தினுலும் சம்பாதிக்கும் சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதனமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (a). ஒரு சொத்தை ஒரு ஸ்திரீ கிரயத்துக்கு வாங்கி அதையே மறுபடியும் அடமானம் வைத்து அதிலிருந்து வந்த வரும்படியைக் கொண்டு அடமான பாக்கியை தீர்த்து வந்தாள். அந்த சொத்தானது அவளுடைய ஸ்திரீ தனமென்று தீர்மானிக்கப்பட்டது (b). மற்றொரு கேசில் ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷன் உத்தியோகத்தையும் அதன் வரும்படியையும் பரிக்ரமம் செய்து வந்ததில் அவள் அப்படி சம்பாதிக்கப்பட்ட நிலமானது அவளுடைய ஸ்திரீ தன சொத்தென்று கவனிக்கப்பட்டது (c). ஒரு புருஷனும் புருஷன் மனைவியும் ஜாயிண்டாக வியாபாரம் நடத்தி வருவாளாகில் அந்த வியாபாரத்தின் லாபத்தைக் கொண்டு கிரயமாக வாங்கப்பட்ட சொத்துக்களில் பேர்பாதி அந்த மனைவியின் ஸ்திரீதன சொத்துக்களென்றும் அவளுடைய காலத்திற்கு பிறகு அவளுடைய ஸ்திரீதன வார்சுகளுக்கு சேருமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

7. விவாகத்தில் கொடுக்கப்படும் வெகுமதிகள்.

விவாக காலத்தில் கொடுக்கப்படும் சொத்துக்கள், உதாரணமாக நகைகள் துணிகள் முதலியன ஒரு ஸ்திரீயின் சொந்த சொத்துக்களென்றே பாவிக்கப்படும். அவை எவ்விதத்திலும் அவளுடைய குடும்ப சொத்தென்று கவனிக்கப்படாது. (d)

யௌதகம் என்பது விவாகம் நடக்கும் காலத்தில் கொடுக்கப்படும் வெகுமதிகள். (தென் இந்தியாவில் இவை ஆசீர்வாதசொத்துக்களென்றும் மொய் தொகைகளென்றும் சொல்லப்பட்டு வருகின்றன). இந்த சொத்துக்கள் இருவகைப்பட்டதாகும். அத்யக்னிகம் என்றும், அத்ய வாகநீக மென்றும் சொல்லப்பட்டு வருகின்றன. அத்யக்னிகமென்பது விவாகம் நடக்கும் காலத்தில் அதாவது கன்னிகா

---

(a) சுப்பரமணியம் vs. அருணுசலம். 28. Mad. 1.
(b) ததிபோயினு vs. தேவகுட்டி 28. M. L. J. 495
(c) சாலம்மா vs. லக்ஷ்மணு 21. Mad. 100.
(d) தாயாரம்மாள் vs. கிருஷ்ணு 32.C. I. 955.

தானம் நடக்கும் காலத்தில் அக்னி முன்பாக தானமாக கொடுக்கப் படும் சொத்துக்கள். அத்யவாகனீக மென்பதற்கு விவாக காலத்தில் தம்பதிகள் ஊர்வலம் வருகையில் கொடுக்கப்பட்ட சொத்துக்களென்று அர்த்தமாகும்.

சுல்கம்:—சுல்க மென்பது ஆதியில் ஒரு பெண்ணை கலியாணத் திற்கு கொடுப்பதற்காக அவளுடைய தகப்பனுருக்கு அவளை விவாகம் செய்துக் கொள்பவரால் கொடுக்கப்பட்ட தொகை என்று இருந்தது. அதாவது முன் காலத்தில் அசுர விவாகங்கள் அதிகமாக நடத்தப் பட்டு வந்ததால் கன்னிகைகளுக்காக கிரயத் தொகை கொடுக்கப் பட்டு வந்தது. பிறகு கன்னிகைகளை தானமாக கொடுப்பது சிரேஷ் டமானதென்று கருதப்பட்டு வந்ததால் சுல்க மென்று யாதொரு தொகையும் வாங்கப்படாமலிருந்து வந்தது. இப்பொழுது விவாக காலத்தில் ஒரு கன்னிகைக்காக கொடுக்கப்படும் சொத்துக்கள் அவளு டைய தகப்பனுருக்குச் சேராமல் அவளுடைய ஸ்திரீதனமென்று பாவிக்கப்பட்டு வருகிறது. சுல்க மென்பதை பரியமென்று சொல்வது வழக்கமுண்டு. பரியத் தொகையானது ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன ஆஸ்தியில் சேருவதாகும்.

(8) அத்தியவேதனீகம்:—

அத்தியவேதனீக மென்பது ஒரு ஸ்திரீக்கு அவளுடைய புரு ஷன் மற்றொரு ஸ்திரீயை விவாகம் செய்துக்கொள்ளும் காலத்தில் அவளுக்கு மனது திருப்திக்காகவும் சந்தோஷத்திற்காகவும் ஜீவனத் திற்காகவும் கொடுக்கும் சொத்துக்களை குறிப்பதாகும்.

யாக்ஞவல்க்ய ஸ்மிருதி:—

ஒரு புருஷன் தன்னுடைய முதல் மனைவி இருக்கையில் இரண்டாவ தாக மற்றொருமனைவியை விவாகம் செய்துக்கொள்வானுயின் அவன் இரண்டா வது மனைவிக்காக எவ்வளவு தொகை கொடுப்பானே அவ்வளவு தொகையை முதல் மனைவிக்கு நஷ்டஈடாக கொடுக்கவேண்டும். ஆனுல் அவளுக்கு அதற்கு முந்தியே ஏதாவது சொத்து கொடுக்கப்பட்டிருக்கும் பக்ஷத்தில் இரண்டா வது மனைவிக்கு எவ்வளவு கொடுக்கிருரோ அதில் பாதிகொடுக்கவேண்டும்.

இதே மாதிரியாக மீதாக்ஷா கிரந்தத்திலும் சொல்லப்பட்டுள் ளது

அத்தியவேதனீகம் என்பது, சாதாரணமாக இந்தியாவில் வழங்கு வது உண்டு என்று பிரீவி கௌன்ஸில் கோர்ட்டார் தக்ரோ vs. கங்கப்ரசாத் (n) என்னும் கேசில் சொல்லி யிருக்கிருர்கள்.

---

(n) 10. All. 179.

(9) அன்வதேயகம் —

அன்வதேயகமென்பது ஒரு ஸ்திரீக்கு விவாகம்நடந்தபிறகு அவளுடைய புருஷனாவாவது அல்லது அவள் புருஷனின் பந்துக்களாலாவது இனாமாக கொடுக்கப்பட்ட சொத்துக்களாகும். ஒரு ஸ்திரீ தன்னுடைய தகப்பனாரிடமிருந்து தன் விவாகத்திற்கு பிறகு பெற்ற சொத்துக்களும் (o) தன்னுடைய சகோதாரிடமிருந்து பெற்ற சொத்துக்களும் (p) அன்வதேயகமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.

## 3-வது அத்தியாயம்.

### ஸ்திரிதன சொத்துக்களின் பேரில் புருஷனுக்குள்ள அதிகாரம்.

ஒருஸ்திரீ தன்னுடைய புருஷன் உயிரோடிருக்குங்காலத்தில் சௌதாயகம் என்னும் சொத்துக்களைத்தவிர தம்முடைய மற்ற ஸ்திரீதன சொத்துக்களை தம் புருஷனுடைய உத்திரவில்லாமல் பராதீனம் செய்வதற்கில்லை. தன்னுடைய புருஷனின் உத்திரவுக்குட்பட்டு தாம் உயிரோடிருக்கும் போதாவது அல்லது உயில் மூலமாகவாவது தம்முடைய ஸ்திரீதன சொத்துக்களை வினியோகம் செய்யலாம்.

"சௌதாயகமென்பது" ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷன் அல்லது தகப்பனார் அல்லது சகோதரர்கள் இவர்களிடமிருந்து பெறும் சொத்துக்கள்.

ஒரு கேஸில், ஒரு ஸ்திரீ தன்னுடைய ஸ்திரீதன சொத்தை பராதீனம் செய்வதற்கு உரிமையுள்ளவளா இல்லையா என்பதின் விஷயமாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. ஒரு கெங்காபாய் என்பவள் ஒரு விருத்தி அல்லது மதசம்பந்தமான ஒரு உத்தியோகத்தை தன்னுடைய காலஞ்சென்ற புருஷனுக்கு வார்சாகபெற்றிருந்தாள். அந்த உத்தியோகத்தின் முறையையில் அதைநடத்துவதற்காக பிராத்தனைமுதலிய பணம்சேருவதுவழக்கமுண்டு. அவள் தன்னுடைய உரிமையை தன்னுடைய ஜீவியகாலத்திலேயே தன் பெண்ணுக்கும் கிருஷ்ணாபாய் என்னும் ஒரு பேத்திக்கும் தானமாக கொடுத்து விட்டாள். கிருஷ்ணாபாய் என்பவள் தன் புருஷனாகிய பாவ் என்பவர் உயிருடனிருக்கையில் ஒரு ரகுநாத் என்பவனுக்கு தன் உரிமையை

(o) சீதாபாய் vs. வஸந்தராவ் 3. Bom. L. R. 201.
(p) வஸந்தா vs. காமிக்ஷியா 33 Cal. 33.

உயில்மூலமாக கொடுத்து விட்டாள். அந்த ரகுநாத் என்பவர் அவளுடைய காலத்திற்கு பிறகு அந்த உயிலுக்கு புரோபேட் பெற்றார். ஆனால், அந்த விருத்தியை நடத்தவொட்டாமல் பாவ் என்பவர் தடை செய்து விட்டார். ரகுநாத் என்பவர் பாவ் என்பவர் மீது தம்மை தடுக்காவொட்டாமலிருக்க ஒரு தடை உத்திரவு (Injunction) பெறுவதற்காக தாவா செய்ததில் கிருஷ்ணுபாய் என்பவள் தம்முடைய புருஷன் உயிரோடிருக்குங்காலத்தில் தம்முடைய ஸ்திரீதன சொத்துக்களை உயில் மூலமாக பாராதீனம் செய்யலாமா என்னும் கேள்வி வந்தது. அந்த கேஸில் கிருஷ்ணுபாய் என்பவள் தன்னுடைய பாட்டியினிடமிருந்து பெற்ற சொத்துக்கள் ஸ்திரீதன சொத்துக்களென்றே ஒரு அனுமானம் கொள்ளப்பட்டது. ஹிந்து சட்டப் பிரகாரம் ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷன் உயிருடனிருக்குங்காலத்தில் உயில் மூலமாகவாவது அல்லது வேறே விதமாகவாவது தன் புருஷனுடைய உத்திரவில்லாமல் பாராதீனம் செய்வதற்கில்லை என்று அந்த கேஸில் தீர்மானிக்கப்பட்டது. (a) மற்றொரு கேஸில் ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷன் தன்னை விட்டுவிட்டு வேறே இடத்தில் மற்றொரு ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டு வாழ்ந்து வந்திருக்கையில் தாம் தன்னுடைய புருஷன் உயிருடனிருக்கையிலேயே தன் ஸ்திரீதன சொத்துக்களை அவருடைய சம்மதமில்லாமல் பாராதீனம் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது. (b).

ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்தை மிகவும் நெருக்கடியான அவசரக்காலங்களில் அவளுடைய புருஷனானவன் எடுத்து உபயோகிக்கலாமென்று மீதாக்ஷரா கிரந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், சௌதாயகம் என்னும் ஸ்திரீதன சொத்தை சேர்ந்தவரையிலும் புருஷனுக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாது. ஒரு ஸ்திரிக்கு தன்னுடைய புருஷன் இறந்த பிறகு தன்னுடைய ஸ்திரீதன சொத்தை தன்னிஷ்டபிரகாரம் பாராதீனம் செய்யலாம். ஒரு ஸ்திரீ, தன்னுடைய ஸ்திரீதன சொத்துக்களை தன்னுடைய புருஷன் ஜீவியகாலத்திலேயே ஒரு உயில் மூலமாகவாவது அல்லது வேறே விதமாகவாவது சொத்துக்களை பாராதீனம் செய்யவிருக்க தன் புருஷன் இறந்த பிறகும் அதே மாதிரியாக பாராதீனம் முதலியவை

(a) பாவ் vs. ரகுநாத் Bom. 229.

(b) பகவான்தாஸ் vs தீவாளி 83 I. C.

செய்வதற்கு யாதொரு தடையுமில்லை என்று வெங்கடா VS. வெங்கட (c) என்னும் கேஸிலும் மாதவராய VS. தீர்த்தஸ்வாமி (d) என்னும் கேஸிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

## 4-வது அத்தியாயம்.

### ஸ்திரீதன சொத்துக்களின் வார்சு விதாயகம்.

### மிதாக்ஷர நியாயம்.

சென்னை மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் வழங்கும் ஹிந்து சட்டமானது மிதாக்ஷரம் என்னும் வியாக்கியான கிரந்தத்தை யொட்டி அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆகையால் இனி இவ்வத்தியாயத்தில் சொல்லப்படும் யாவையும் மிதாக்ஷரநியாயத்தைப் பொருந்தினதாகும். வங்காள தேசத்தில் வழங்கும் நியாயம் தாய பாகம் என்றும் பம்பாய் மாகாணத்தில் வழங்கும் நியாயம் மயூகம் என்றும் சொல்லப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திலும் தனித்தனியாக வார்சு முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இனி ஒவ்வொருவிதமான ஸ்திரியினுடைய சொத்துகளின் வார்சு விதாயகமானது எவ்வாறு என்பதைக் கவனிப்போம்.

இதற்கு முந்தின அத்தியாயத்தில் ஒருஸ்திரி தன்னுடைய ஸ்திரீதன சொத்தை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அல்லது யாதொரு நிபந்தனையுமில்லாமல் தம் ஜீவியகாலத்திற்குள் பாதீனம் செய்யலாம் அல்லது உயில் மூலமாக விநியோகப்படுத்தலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தாம் உயிருடன் இருக்கும்போது யாதொரு தானம் அல்லது பாதீனம் செய்யாமலும் அல்லது யாதொரு உயிலும் எழுதிவைக்காமலும் இறந்துபோகும் ஸ்திரிகளுடைய ஸ்திரிதனமானது எவ்வாறு எவரெவர்களுக்குச் சேருவதாகும் என்பதைப் பற்றி இவ்வத்தியாயத்தில் கவனிப்போம். விவாகமாகாத ஸ்திரி, விவாகமாகி சந்ததியுடன் கூடிய ஸ்திரி, விவாகமாகியும் சந்ததியில்லாத ஸ்திரி, இவர்களுடைய ஸ்திரீதன சொத்துகள் முறையே வெவ்வேறு விதமாக தனித்தனியான வார்சுகளுக்கு சங்கிரமிப்பதாகும். இனி அவைகளின் முறைகளைப்பற்றி கவனிப்போம்.

---

(c) 2. Madras. 333.
(d) 1. Madras. 307.

## விவாகமாகாத ஸ்திரீகளுடைய சொத்துக்களின் வாரசு விதாயகம்.

ஒரு விவாகமாகாத ஸ்திரீ யாதொரு உயில் அல்லது பாரதீனம் செய்யாமல் ஸ்திரீதன சொத்துக்களை விட்டுவிட்டு இறந்தால் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்கள் அடியில்கண்ட வரிசைப்பிரகாரம் அவளுடைய வார்சுகளால் அடையப்படும்.

(1) சகோதரர்கள் (தன் தாய் வயற்றில் பிறந்தவர்கள்.)

(2) தாயார்.

(3) தகப்பனார்.

(4) தகப்பனாருடைய சபிண்டர்கள்.

(5) தாயாருடைய சபிண்டர்கள்.

(6) அவளுடைய சொந்த சபிண்டர்கள்.

இவர்கள் ஒருவர் தப்பினால் மற்றொருவர் மேலே சொன்ன வரிசைப் பிரகாரம் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களை அடைய அருகராயிருப்பவர்கள்.

மேலே சொல்லப்பட்ட வார்சு விதாயகமானது பௌத்தாயன ஸ்மிருதியில் சொல்லப்பட்டு பிறகு மீதாக்ஷா கிரந்தத்தில் பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது.

"ஒரு ஸ்திரி தன்னுடைய விவாகம் ஆவதற்கு நிச்சயமானவுடன் இறந்துபோகும் பக்ஷத்தில், அவளுக்கு புருஷனாக ஏற்பாடு செய்யப்பட்ட நபர் தாம் கொடுத்திருந்த எல்லா வெகுமதிகளையும் எடுத்துக்கொள்ளட்டும். ஆனால், இரண்டு பக்கத்திலும் நேர்ந்த செலவுகளை அவரே பரித்துக்கொள்ள வேண்டும். ஒரு விவாகமான பெண் இறந்து போகும் பக்ஷத்தில், விவாக புருஷன் அவளுடைய உரிமைகளையும் மற்ற வெகுமதிகளையும் அல்லது விவாகத்திற்காக அவரால் முன்னமே கொடுக்கப்பட்ட தொகைகளையும் பெறவேண்டும். ஆனால், இரண்டு பக்கங்களில் நேர்ந்த செலவுகளை அதாவது அந்தப்பெண்ணை அவருக்கு கொடுத்த நபருக்கும் தமக்கும் நேர்ந்த செலவுகளை அவரே பரித்துக்கொண்டு மீதியை அவர் எடுத்துக்கொள்ளவேண்டும் ஆனால் அவளுடைய சகோதரர்கள், அவளுடைய தலைக்கு அங்கமாக கொடுக்கப்பட்ட நகைகளையும் அந்த ஸ்திரிக்கு அவருடைய பாட்டனால் (தாயாரின் தகப்பனார்) கொடுக்கப்பட்ட அல்லது அவளுடைய தகப்பனாரின் சகோதரர்களால் கொடுக்கப்பட்ட சொத்துக்களையும் அவரால் மற்றப்படிக்கு கிரமமாக வார்சாக அடையப்பட்ட சொத்துக்களையும் பெறவேண்டும். ஏனென்றால், பௌத்தாயனர் ஒருஇறந்துபோன பெண்ணின் ஆஸ்தியானது

அவளுடைய சகோதரர்களால் அடையப்படவேண்டுமென்றும் அவர்களில்லாவிட்டால் அவளுடைய தாயாருக்கு சேரவேண்டுமென்றும், அவளுமில்லாவிட்டால் அவளுடைய தகப்பனுருக்கு சேரவேண்டுமென்றும் சொல்லி இருக்கிறுர்."

இப்பொழுது இந்தியாவில் ஹைக்கோர்ட்டுகள் மேலே சொல்லப்பட்ட வரிசைக்கிரமந்தான் அனுசரிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். மேலே நான்காவதாக ஒருஸ்திரியின் தகப்பனுருடைய சபிண்டர்கள் என்று சொல்லப்பட்டதில், அது அவளுடைய கிரமமான கிரம ரீதியிலுள்ள பாத்தியஸ்தர்களை மாத்திரம் குறிப்பதாகும். ஆகையால் ஒரு ஸ்திரியினுடைய புருஷன் ஒரு சூத்திரனுயிருந்து அவருடைய சோரபுத்திரன் அவருக்கு ஒரு வார்சாக இருந்தபோதிலும் அதனுலேயே அப்புத்திரன் அவருடைய மனேவிக்கு ஒரு சபிண்டாக கவனிக்கப்படமாட்டாரென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (a) ஒரு விவாகமாகாத ஸ்திரியின் தகப்பனுருடைய சிறிய தகப்பனின் மகள் தகப்பனுருடைய சகோதரியைவிட மேலான வார்சு என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (b) ஒரு விவாகமாகாத ஸ்திரிக்கு அவளுடைய சகோதரி அவளுடைய தகப்பனுருடைய சகோதரியின் மகனைவிட உயர்ந்த வார்சென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (c) ஒரு விவாகமாகாத ஸ்திரிக்கு அவளுடைய தகப்பனுரின் ஐந்தாறு தலைமுறை நீங்கின ஒரு சபிண்டரைவிட தகப்பனுருடைய சகோதரியே மேலான வார்சு என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (d) ஒரு தாய் வழி பாட்டியைகாட்டிலும் தகப்பனுருடைய தாயாரின் சகோதரி மேலான வார்சென்றும் (e) ஒரு தாயாரின் சகோதரியைக் காட்டிலும் ஒரு மாற்றுந்தாய் மேலானவார்சென்றும் (f) தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவாகமாகாத விபசாரியின் சொத்துக்களுக்கு மஹாராஜா சக்ரவர்த்தியைக் காட்டிலும் அவளுடைய சகோதரி ஒரு மேலான வார்சென்று கவனிக்கப்படுவாள். (g)

---

(a) சுப்ரமணிய vs. ரத்னவேலு 41 Mad. 44, F. B, ஐரேஸ்வரய்ய vs. சிவாஜி 49 Mad. 116

(b) சுந்தரம் vs. ராமஸ்வாமி 43 Mad 32, கமலா vs. பாகீரதி 38 Mad. 45.

(c) துவாரக நாத் vs. சாரட்சந்தரா 39 Cal. 319.

(d) துக்காராம் vs நாராயணன் 36 Bom. 339.

(e) ஜங்குலுபாய் vs. ஜேகா 32 Bom. 409.

(f) கமலா vs. பாகீரதி 38 Mad. 45.

(g) நாராயணன் vs. லக்ஷ்மணன் 51 Bom. 784.

## விவாகமானதும் சந்ததிகளையுடையவர்களுமான ஸ்திரீகளின் சொத்துக்களுக்கு வார்சு விதாயகமும், வார்சு வரிசைக் கிரமமும்.

பிரம்ம விவாகத்தினால் இணையுற்று சந்ததிகளையுடையவளுமான ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்துக்கள் அடியில் கண்டவாறு அவளுடைய பாத்தியஸ்தர்களுக்கு சங்கரமிப்பதாகும்.

1. விவாகமாகாத புத்திரிகள்.

2. விவாகமானபோதிலும் ஏழையாகவோ அல்லது சந்ததி இல்லாமலோ இருக்கும் புத்திரிகள்.

3. நல்ல அந்தஸ்திலுள்ள விவாகமான புத்திரிகள்.
4. புத்திரியின் புத்திரி.
5, புத்திரியின் புத்திரன்.
6. புத்திரன்.
7. புத்திரனுடைய புத்திரன்.
8. புருஷன்.
9. புருஷனுடைய நெருங்கிய சபிண்டர்கள்.
10. அவளுடைய சொந்த இதரபாத்தியஸ்தர்கள்.

அசுர விவாகமுள்ள ஸ்திரீகளின் வார்சுகள் பின்வருமாறு.

1. தாயார்.
2. தகப்பனார்.
3. தகப்பனாரின் சபிண்டர்கள்.

மேலே சொல்லியவைகளுக்கு ஆதாரம் மிதாக்ஷரமென்னும் ஸ்மிருதியில் உள்ளது. இனி ஒவ்வொரு வார்சினுடைய விதாயகத்தைப்பற்றி கோர்ட்டுகளும் ஸ்மிருதிகளும் எவ்வாறு சொல்லப் பட்டுள்ளன வென்பதை கவனிப்போம்.

முதலாவதாக, ஒரு விவாகமான ஸ்திரிக்கு ஏதாவது விவாக மாகாத பெண் இருக்கும் பக்ஷத்தில் அப்பெண்தான் அவளுடைய ஸ்திரீதனத்திற்கு வார்சாவாள். மிதாக்ஷரத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது:

“ஆகையால் தாயானவள் இறந்துவிடும் பக்ஷத்தில் அவளுடைய புத்திரிகள் முதலாவதாக அவளுடைய சொத்தை அடைவார்கள். அவர்களிலும்

விவாகமான பெண்களுக்கும் விவாகமாகாத பெண்களுக்கும் ஏதாவது போட்டி ஏற்படும் பக்ஷத்தில், விவாகமாகாத பெண்ணே தான் அந்த சொத்துக்களை அடைவாள். விவாகமாகாத பெண் ஒருவருமில்லாத பக்ஷத்தில் விவாகமான பெண்கள் அடையவேண்டும். அவர்களுக்குள்ளும் யாதொரு போட்டி கிளம்பும் பக்ஷத்தில் ஏழையான பெண்கள்தான் அடையவேண்டும். ஏழையான யாதொரு பெண்ணும் இல்லாத பக்ஷத்தில் உயர்ந்த ஸ்திதியிலுள்ள பெண்களனைவரும் அடையவேண்டும். இதேமாதிரியாக கௌதமரும் ஒரு ஸ்திரியின் சொத்துக்கள் அவளுடைய விவாகமாகாத பெண்ணுக்கும் விவாகமாகியும் ஏழையாயிருக்கும் பெண்ணுக்கும் சற்று உன்னத ஸ்திதியிலிருக்கும் பெண்ணுக்கும் முறைபிரகாரம் சேரவேண்டியதா இருக்கு மென்று சொல்லுகிறார். ஏழையாயிருக்கும் என்னும் பதத்துக்கு 'யாதொரு சொத்தில்லாத அல்லது சந்ததியில்லாத' என்று அர்த்தமாகும்" (மீதாக்ஷரம் II-அத்தியாயம் XI ஸர்க்கம் 13-வது சுலோகம்).

மேலே சொல்லப்பட்ட சுலோகங்களைப்பற்றி ஸர் குருதாஸ் பனர்ஜி என்பவர் பின்வருமாறு சொல்லுகிறார்: "மீதாக்ஷரத்தின் கிரந்தகர்த்தாவாகிய விஜ்ஞானேஸ்வரர் என்பவர், ஏழையான புத்திரிகள் அவர்களுக்கு சந்ததி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பணக்கார புத்திரிகளிக்கு முன்பாகவே உரிமைபெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டதாக நினைக்கிறேன். புத்திரிகளுக்குள் ஒருவருக்கொருவருடைய வாழ்க்கை நிலைமையும் அந்தஸ்தும் ஒரேமாதிரியாக இருந்தால்தான் சந்ததி இல்லாத புத்திரிகள், சந்ததியுள்ள புத்திரிகளைவிட மேலான பாத்தியதை அடையமுடியுமென்று நினைக்கிறேன்" ஏழையான பெண்களுக்குள் இன்னாருக்குத்தான் யாதொரு தொகை சேரவேண்டுமென்று நிச்சயிப்பதில் யாதொரு கடினமான நிர்ணயங்களை அனுசரிப்பதற்கில்லை. சாதாரணமாக இரண்டு புத்திரிகளுக்குள் மிகவும் எளிதில் தெரியும்படியாக ஏறத்தாழ்வான சொத்துக்களிருக்கும் பக்ஷத்தில் ஏழையான பெண்ணுக்கே அந்த சொத்தானது சேர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (a). அநேக புத்திரிகள் ஜாயிண்டாக சொத்துக்களை அடையும் பக்ஷத்தில் அவர்கள் அந்த சொத்துக்களில் தனித்தனி உரிமையுள்ளவராக ஒன்றாகச் சேர்ந்து அனுபவிக்கும்படி இருக்கும். ஆனால், அவர்களில் ஒருத்தி இறந்த பிறகு மற்றொருவள் அவளுடைய சொத்துக்களில் பாத்தியதை கொண்டாடுவதற்கில்லை (b)

---

(a.) சிம்மணி vs. முத்தம்மாள் 3 Mad. 265.

(b.) கருப்பை vs. சங்கர நாராயணன் 27 Mad. 300 F. B

ஒரு விபசாரத்தனமுள்ள புத்திரி அல்லது சோரபுத்திரி ஸ்திரீதன சொத்துக்கு வார்சாக இருப்பதற்கு யாதொரு தடையுமில்லை. ஆனால், அப்படிப்பட்ட புத்திரியானவள் விவாகமான புத்திரி என்றாவது, விவாகமாகாத புத்திரியென்றாவது கவனிக்கமாட்டாளாகையால் அப்படிப்பட்ட சரியான புத்திரிகள் இல்லாவிட்டால் தான் அவர்கள் வார்சுகளாக இருந்து சொத்துக்களை அடைவார்கள் (a)

பெண்களில்லாவிட்டால், பெண்களுடைய புத்திரிகள் ஸ்திரீதன சொத்துக்களுக்கு வார்சு ஆவார்கள். மீதாக்ஷர ஸ்மிருதியின் பிரகாரமும், கௌதம ஸ்மிருதியின் பிரகாரமும் பெண்களுடைய பெண்கள் தங்கள் தாயார்களின் மூலமாக சொத்துக்களை பெறுவதாக கவனிக்கப்படுவார்களாகையால், அவர்கள் ஒவ்வொருவரும் சமபாகமாக அல்லாமல் தங்கள் தாயார்களுக்குள் ஒவ்வொருவருக்கும் சமபாகமாக பங்கு ஏற்பட்டால் எவ்வளவு வருமோ அந்த கணக்கு பிரகாரம் சொத்துக்களை அடைய உரிமையுள்ளவராவார்கள். உதாரணமாக, ஒரு ஸ்திரிக்கு மூன்று பெண்களிருந்து முதல் பெண்ணுக்கு இரண்டு புத்திரிகளும் இரண்டாவது பெண்ணுக்கு நான்கு புத்திரிகளும் மூன்றாவது பெண்ணுக்கு ஒரே புத்திரியுமாக இருந்து அந்த ஸ்திரியின் புத்திரிகள் யாவரும் அவளுக்கு முன்னமேயே இறந்துவிட்டிருக்கும் பக்ஷத்தில், அவளுடைய பேத்திமார்களுக்கு மொத்த சொத்தும் ஏழு பாகமாக பங்கிடப்படாமல் மூன்றுபாகமாக பங்கிடப்பட்டு ஒரு பாகம் முதல் புத்திரியின் இரண்டு புத்திரிகளுக்கும் மற்றொரு பாகம் இரண்டாவது புத்திரியின் நான்கு புத்திரிகளுக்கும் மற்றும் ஒரு பாகம் மூன்றாவது புத்திரியின் புத்திரிக்குமாக பங்கிடப்படும். (d). ஒரு ஸ்திரிக்கு, அவள் இறந்து போகும் காலத்தில் அவளுக்கு வார்சாக பெண்களும் ஏற்கனவே இறந்து போயிருக்கும் ஒரு பெண்ணின் துவாரா பேத்திகளும் இருக்கும் பக்ஷத்தில், பேத்திகளுக்கு யாதொரு பாகமும் கிடையாது. ஆனால், மனுஸ்மிருதியின் பிரகாரமும், மீதாக்ஷர கிரந்தத்தின் பிரகாரமும் அவர்களுக்கும் தங்கள் பாட்டியின் அந்தஸ்துக்குத் தக்கினதுபோல் வாஞ்சைக்காக கொஞ்ச பாகம் கொடுக்கவேண்டும். ஆனால், இந்த பாகமானது ஒரு உரிமை

(a) அத்தியபா vs. ருத்ரவா 4 Bom. 104, தாரா vs. கிருஷ்ண 31 Bom. 495.

(d) சுப்பரமணியம் vs. அருணசலம் 28 Mad. 1.

யால் சம்பவித்ததென கருதப்படாது. பெண்ணின் பெண்கள் விவாகம் ஆயிருந்தபோதிலும், விவாகம் ஆகாமலிருந்தபோதிலும், ஒருவருக்கொருவர் சமபாகமாக பங்கிட்டுக்கொள்ளலாம்.

புத்திரியின் புத்திரர்

நாரதஸ்மிருதியின் 13-வது அத்தியாயம் 1-வது ஸ்லோகத்தின் பிரகாரம் ஒரு ஸ்திரியின் பெண்ணுக்குப் பிறகு பெண்ணின் புத்திரன் அவளுடைய சொத்துக்களை அடையவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், ஸ்மிருதி சந்திரிகை என்னும் க்ரந்தத்தின் பிரகாரம் புத்திரிகளுடைய புத்திரர்களும், புத்திரிகளின் புத்திரிகளைப்போலவே சொத்துக்களை அடையவேண்டுமென்றும், ஆனால், புத்திரிகளின் புத்திரிகளுக்கு பிறகுதான் புத்திரிகளின் புத்திரர்கள் அந்த ஸ்திரீதன சொத்தையடையலாமென்று உள்ளது. (e). ஒரு கேஸில் (f). இதே மாதிரியாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு புத்திரியின் புத்திரர் என்று சொல்லுமிடத்து, புத்திரியின் சுவீகார புத்திரனையும் அணைக்குமா என்பது முக்கியமான கேள்வியாகும். இதன் விஷயமாக இதுவரையிலும் யாதொரு பிரச்னையும் கிளம்பவில்லை. ஆனால், ஸ்திரீதன சொத்துக்களானது, வெகுசாக ரத்த சம்பந்தமான பாத்தியதைகளை ஒட்டி சங்கமிப்பதாக இருப்பதால்அவர்கள் நிவர்த்திக்கப்படவேண்டு மென்று ஸர் ஹரி சிங்கவர் என்பவரும் பானர்ஜி என்பவரும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

புத்திரன்.

யாக்ஞவல்கிய ஸ்மிருதியிலும் விஜ்ஞானேஸ்வரருடைய மீதாக்ஷரனும் க்ரந்தத்திலும், ஒரு புத்திரியின் புத்திரனுக்கு பிறகு புத்திரன் ஸ்திரீதன சொத்துக்களை அடையலாமென்று உள்ளது. இதேமாதிரியாக ஒரு கேஸில் (g) தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. புத்திரன் என்பது நியாயரீதியில் பிறந்த ஒரு புத்திரனை குறிக்குமே யொழிய விபசாரத்தினால் பிறந்த ஒரு புத்திரனை குறிக்காதென்று ஐயேஸ்வரீ ஆனந்தாஜீ VS. சிவாஜி (h) என்னும் கேஸிலும், ஜகன்னாத் VS. நாரா

---

(e) ஸ்மிருதிசந்திரிகை 9-வது அத்தியாயம் 3-வது சர்க்கம் 25-வது ஸ்லோகம்.

(f) ஷாம்பிஹாரி VS. ராம்காலீ 45 All 715.
(g) தவன்மால் VS. பரமேஸ்வரி A. I. R. 1928 Lah. 9.
(h) 49. M. L. J. 568.

யணன் (i) என்னும் கேஸிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் புத்ரன் என்பது ஒரு ஸ்வீகார புத்ரனை அணைக்குமா என்று கேட்போமானால் ஹைகோர்ட்டுகள் பலவிதமாக பதில் அளித்திருக்கின்றனர். அலஹபாத் ஹைகோர்ட்டில் சியாமகுமார் vs. கயாதீன் (j) என்னும் கேஸிலும் பம்பாய் ஹைகோர்ட்டில் ஆனந்தி vs. ஹரி (k) என்னும் கேஸிலும் ஒரு ஸ்வீகார புத்ரன் ஒரு ஔரஸ புத்ரனைப்போல் ஸ்மிருதிகளால் கவனிக்கப்பட்டு வருவதால் அவனும் ஒரு ஔரஸ புத்ரனைப்போலவே ஸ்திரீதன சொத்துக்களைப் பெறுவதற்கு பாத்தியதை யுடையவனுவான் என்று கூறியிருக்கின்றனர். ஆனால், மற்றும் சில கேசுகளில் (l) ஒரு நபர் மற்றொருவருக்கு சுவீகாரமாக கொள்ளப்பட்டதினாலேயே அவருடைய மனைவிக்கும் ஒரு புத்திரனென்று பாவிக்கப்பட்டு அவளுடைய சொத்துக்களுக்கும்பாத்தியதை கொண்டாடுவது நியாய முண்டாகாதென்று தீர்மானித்திருக்கின்றனர். ஒரு ஸ்திரீயின் சககளத்தியின் புத்திரன் அவளுடைய சொந்த புத்திரனுக்கு சமமான அந்தஸ்து உடையவனல்லவென்றும், ஆகையால் அவன் அவளுடைய புருஷனுக்கு பிறகு தன்புருஷனின் சபிண்டராகத்தான் கருதப்படுவாரென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (m) ஒரு ஸ்திரீதன சொத்தை ஒன்றாக, அதாவது சமமாக பெறுபவர்கள் ஒவ்வொருவரும் அந்த சொத்தில் தனித்தனியான அதாவது பிரிவுள்ள அந்தஸ்துடன் அடைந்து அனுபவிப்பவராக கருதப்படுவார்கள். ஆகையால், அவர்களில் ஒருவர் இறந்தபிறகு அவருடைய பாகமானது அந்த சொத்தை அவருடன் பெற்ற மற்ற வார்சுகளுக்கு சேராமல் அவருடைய சொந்த வார்சுகளுக்குச் சேருவதாகும்.(n)

---

(i) 34. Bom. 553.

(j) 1. All. 255.

(k) 33. Bom. 404.

(l) ஸ்ரீ நாராயணன் vs. பியஜி 2. L. S. R. 29=6. I. D. 380.

(m) பீமாசாரியார் vs. ராமாசாரியார் 33. Bom 452.

(n) கருப்பை vs. சங்கரா 27. Mad. 300.
கடம்பனுச்சியார் vs. சிவசங்காராஜா. 9. M. I. A. 543. வெங்கையம்மா vs. வெங்கட ரமணியம்மா 25. Mad. 678. (P. C.)

பேர புத்திரன்.

புத்திரர்களுக்குப் பிறகு புத்திரர்களுடைய புத்திரர்கள் ஒரு ஸ்திரீதன சொத்துக்கு வார்சாக இருப்பார்கள்(o). புத்திரர்களுடைய புத்திரர்கள் தங்களுடைய தகப்பனார்களை பொட்டியே பாகங்களை அடைவார்கள். ஆகையால், ஒரு ஸ்திரீக்கு ஒரு புத்திரன் மூலமாக மூன்று பேர்களும் மற்றொரு புத்திரன் மூலமாக ஒருவரும் இருக்கும் பக்ஷத்தில், முதல் புத்திரனின் மூன்று புத்திரர்களும் சேர்ந்து பாதி பாகமும் இரண்டாவது புத்திரனின் புத்திரன் பாதி பாகமும் அடையும்படி இருக்கும்(p). ஒரு சுவீகார புத்திரன் யாதொரு பாகத்தை அடையும்பக்ஷத்தில், அவன் ஔரஸ புத்திரனைப்போல் ஓர்பாகம் பெறுவான் (q).

புருஷன், புருஷனுடைய சபிண்டர்கள்.

ஒரு ஸ்திரீக்கு புத்திரனுடைய புத்திரன் இல்லாவிட்டால் புருஷனும் புருஷனுடைய சபிண்டர்களும் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களுக்கு வார்சுகளாவார்கள் (r).

ஒரு ஸ்திரீக்கு அவளுடைய புருஷனுடைய முதல் மனைவியின் புத்திரனைவிட புருஷனே உயர்ந்த வார்சென்று ஒரு கேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (s).

ஒரு ஸ்திரீயின் புருஷனுடைய சபிண்டர்களுக்குப் பிறகு, அவளுடைய சொந்தபாத்தியஸ்தர்கள் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களை பெறுவார்கள்(t).

ஒரு ஸ்திரீ சிரேஷ்டமில்லாத விவாகத்தினால் மணம் செய்து கொள்ளப்பட்டிருப்பின் (ஸ்ரேஷ்டமில்லாத விவாகமென்பது அசுர விவாகத்தையும் ராக்ஷஸ விவாகத்தையும் குறிக்கும்.) அவளுடைய

(o) கௌதம ஸ்மிருதி 12-வது அதிகாரம். 32-வது ஸ்லோகம்.

(p) ஸ்மிருதி சந்திரிகை 9-வது அத்தியாயம் 3-வது சர்க்கம். 25-வது ஸ்லோகம்.

(q) நாகின்தாஸ் vs. பச்சு 40. Bom. 270.

(r) துகாராம் vs. நாராயணன். 36. Bom. 339.

(s) பீமாசாரியா vs. ராமாசாரியா 33. Bom. 452.

(t) கனகம்மா vs. ஆனந்தாதி 37. Mad. 293.

ஸ்திரீதன வார்சுகள், அவள் ஒரு விவாகமாகாத ஸ்திரீயாக இருப்பின் எத்தகைய வார்சுகளை பெற்றிருப்பாளோ அதே வார்சுகளாகும். காரணமென்னவென்றால், அந்த விவாகத்தினால் அவள் தன் புருஷனுடைய கோத்திரத்தை அடைகிறதில்லை என்பது. ஆகையால், அவளுடைய சகோதரியானவள் சகோதரியின் புத்திரனுக்கு முன்னாடியாகவே அந்த சொத்துக்களை பெறுவாள் (u).

அவளுடைய தகப்பனாரின் சகோதரருக்கும் அவளுடைய சகோதரிக்கும் போட்டி ஏற்படுமானால் சகோதரியே முன்னாடியாக அடைவாள் (v).

சந்ததி இல்லாத ஸ்திரீயின் ஸ்திரீதன சோத்தின் வார்சு விதாயகம்.

இப்பொழுதுள்ள ஹிந்து சட்டப்பிரகாரம் ஸ்திரீகளின் விவாகமானது இரண்டு வகைப்பட்டதாக உள்ளது. அதாவது பிரம்ம விவாகமென்றும் அசுர விவாகமென்றும் இரண்டு விதங்களாக ஸ்திரீகளின் விவாகமானது வகுப்பிடப்பட்டுள்ளது. பிரம்ம விவாகமென்பது ஒரு நபருக்கு அலங்கரிக்கப்பட்டுள்ள ஒரு கன்னிகையை தானமாக கொடுத்து அவளை மணம் புரிந்துகொள்ளும்படி சொல்வது. இந்த விவாகமானது மிகவும் சிரேஷ்டமானதாகும். அசுர விவாகமானது, ஒரு பெண்ணை ஒரு நபருக்கு விவாகமாக கொடுப்பதற்காக பணம் பெற்றுக்கொண்டு அவளை கொடுப்பது. ஸ்திரீதன வார்சு விதாயகத்தைச் சேர்ந்தவரையிலும் மேலே சொல்லப்பட்டிருக்கும் பேதத்தின் காரண பலன் என்னவென்றால், பிரம்ம விவாகத்தினால் மணம் புரிந்த ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன வார்சுகளுக்கும், அசுர விவாகத்தினால் இணைப்பட்டிருக்கும் ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன வார்சுகளுக்கும் வரிசைக்கிரமத்தில் பேதம் உண்டு. பிரம்ம விவாகத்தினால் கட்டுப்பட்ட ஒரு ஸ்திரீக்கு முதலில் அவளுடைய புருஷனும் அவளுடையபுருஷன் இராதபக்ஷத்தில் அவள் புருஷனின் சபிண்டர்களும் அவர்களுமிராத பக்ஷத்தில் அவளுடைய சொந்த ரத்த சம்பந்தமான பந்துக்களும் வார்சுகளாவார்கள். அசுர விவாகமுள்ள ஒரு ஸ்திரீக்கு முதலில் அவளுடைய தாயாரும் தாயார் இல்லாத பக்ஷத்தில் தகப்பனாரும் அவருமில்லாவிடில் அவளுடைய தகப்பனார்

(u) ராஜு vs. அம்மணி 29. Mad. 358.
(v) கோவிந்த vs. சாவித்ரி. 43. Bom. 173.

அல்லது தாயார் இவர்களுடைய நெருங்கிய பந்துக்களும் வார்சாவார் கள்.

இதைப்பற்றி மீதாக்ஷரம் என்னும் கிரந்தத்தில் பின்வருமாறு :—

"ஒரு ஸ்திரீ சந்ததி இல்லாமல்" இறந்துபோகும் பக்ஷத்தில் அதாவது தன் வயற்றில் பிறந்த ஒரு பெண், பெண்ணின் பெண், அல்லது பெண்ணின் புத்திரன், அல்லது புத்திரன், அல்லது புத்திரனின் புத்திரன், இத்தகைய ஜனனிகள் யாவருமில்லாமல் இறந்துபோகும் பக்ஷத்தில் அவளுடைய உர வினர்களால் அதாவது புருஷன், இன்னும் விவரிக்கப்பட்ட நபர்களால் அவளுக்குடைய சொத்துக்கள் அடையப்படவேண்டும்

மேலே சொன்ன பிரகாரம் சந்ததி இல்லாமல் இறந்து போகும் ஒரு ஸ்திரியானவள், பிரம்ம விவாகம் தெய்வ விவாகம், அர்ஷ விவாகம், அல்லது பிராஜாபத்திய விவாகம், இத்தகைய விவாகங்களில் ஒன்றினாலாவது ஒரு மனைவியாக கொள்ளப்பட்டிருப்பின், மேலே சொல்லப்பட்ட அவளுடைய மொத்த ஆஸ்தியும் முதல் முதலாவதாக அவளுடைய புருஷனைச் சேருவ தாகும். அவளுடைய புருஷன் உயிருடன் இராத பக்ஷத்தில் அவளுடைய தாயாதிகளுக்கு (அதாவது புருஷனுடைய தாயாதிகளுக்கு) அந்த சொத்துக் கள் சேருவதாகும். மற்ற விதங்களான அசுர விவாகம், காந்தர்வ விவாகம் ராக்ஷஸ விவாகம், பைசாச விவாகம், ஆகிய இத்தகைய விவாகங்களில் மணம் புரிந்துக்கொள்ளப்பட்ட ஒரு ஸ்திரிகளின் ஸ்திரீதன சொத்துக்கள் அவளுடைய பெற்றோர்களுக்கு அதாவது அவளுடைய தகப்பனார், தாயார் இவர்களுக்குச் சேருவதாகும். முதல் முதலாவதாக அவளுடைய தாயாருக்கும் பிறகு தகப்பனாருக்கும் சேருவதாகும். இவர்களுக்கு பிறகு இவர்களுடைய உரவினர்கள் அந்த சொத்துக்களை அடைவார்கள்."

சந்ததியில்லாத ஸ்திரீ என்பதற்கு ஒரு, கேஸில் வாஸ்தவமான அல்லது நியாயமான சந்ததி இல்லாத ஸ்திரீ என்று அர்த்தமாகு மென்று ஒருகேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (a). சுவீகார புத்தி ரனையுடைய ஒரு ஸ்திரீ சந்ததியற்ற ஸ்திரியல்லவென்றும் அவளுக்கு அவளுடைய புருஷனின் மற்றொரு மனைவிக்கு ஒரு புத்திரன் இருந்த போதிலும் அவள் சந்ததியற்றவளென்றே கவனிக்கப்படுவாளென் றும் ஒரு கேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (b). ஒரு ஸ்திரியினு டைய புத்திரன் அல்லது புத்திரியானவள் அவள் இறப்பதற்கு முன்னமே இறந்து போயிருக்கும் பக்ஷத்தில் அப்பொழுதும் அந்த ஸ்திரி சந்ததியற்ற ஸ்திரீயென்றே கவனிக்கப்படுவாள்(c).

---

(a) ஜகன்னாத vs. நாராயணன் 34. Bom. 553.
(b) கெங்காதரர் vs. ஹீராலால் 43 Cal. 994.
(c) சுந்தரபாகா Vs. விஸ்வநாத் 20. I. C. 557.

ஒரு விவாகமானது பிரம்ம விவாகமா அல்லது அசுரவிவாகமா என்பதைப்பற்றி கவனிக்குமிடத்து சாதாரணமாக அவ்விவாகம் பிரம்ம விவாகமென்றே அனுமானிக்கப்படுமென்று கோர்ட்டுகள் தீர்மானித்திருக்கின்றன. ஒரு நபர் யாதொரு விவாகமானது பிரம்ம விவாகமல்லவென்றும் அசுர விவாகந்தானென்றும் சொல்லுவாராகில் அவரே தான் அதை ருசுப்படுத்தவேண்டும்(d).

அசுரவிவாகத்திற்கும், பிரம்ம விவாகத்திற்கும் உள்ள வித்தியாசங்களை கண்டறியவேண்டுமென்றால், ஒருவிவாகமானது, எத்தகைய சடங்குகளைக் கொண்டு செய்யப்பட்டது, அந்த விவாக கன்னிகைக்காக விவாகம் கொள்பவரால் ஏதாவது தொகை கொடுக்கப்பட்டதா என்பவைகளையும் அறியவேண்டும். தென் இந்தியாவில் சாதாரணமாக பிராமணர்களுக்குள் நடக்கும் விவாகமானது பிரம்ம விவாகமென்றும் சூத்திரர்களுக்குள் நடக்கும் விவாகமானது அசுர விவாகமென்றும் ஒரு பொதுவான ஐதிகம் இருந்த போதிலும் பிராமணர்களுக்குள் அனேக அசுர விவாகங்களும் சூத்திரர்களுக்குள் அனேக பிரம்ம விவாகங்களும் நடந்து வருவதாக பிரமுகர்கள் கண்டறிந்திருக்கின்றனர். ஆயினும் இப்பொழுது தென் இந்தியாவில் அசுரவிவாக மென்பதே அதிகமாக நடத்தப்படுவதில்லை. எல்லா ஜாதியினர்களும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட ஸ்ரேஷ்டமான விவாகமாகிய பிரம்ம விவாகத்தையே நடத்தி வருகின்றனர்.

மேலே ஒரு பிரம்ம விவாகத்தினால் இணைக்கப்பட்ட ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்துக்கள் அவளுக்கு யாதொரு சந்ததியுமில்லாவிடில் அவளுடைய புருஷனை சேருவதாகுமென்று சொன்னோம். அவளுடைய புருஷனுக்கு பிறகு அவளுடைய புருஷனின் வார்சுகள் அந்த சொத்துக்களை அவை அந்த புருஷனின் சுயார்ஜிதம்போல் பெற்று அனுபவிப்பார்கள். (e)

ஒரு ஸ்திரீயினுடைய புருஷனின் சபிண்டர்கள் எவர்கள் என்னும் விஷயமாக பிரஹஸ்பதி என்பவர் ஒருவரிசை கிரமத்தை சொல்லி

(d) ஆதிகேசவலு vs ராமானுஜம் 32 Mad 512.

(e) தாக்கூர்தேவி vs. பாலக்ராம் 11. M. I. A. 135.
சம்பத் vs. சிவ 8. All. 393.
ஜகன்னாத் vs. ரஞ்ஜிட்சிங் 25. Cal. 354.
மரியபிள்ளை vs. சிவபாக்கியதாச்சி 36. Mad. 116.
கனகம்மாள் vs. ஆனந்தாதி 37. Mad. 293.

இருக்கிறார். அவ்வரிசைக் கிரமமானது சரியானதென்று பிரீவி கௌன்சில் கோர்ட்டார் அங்கீகரிக்காமல் மீதாக்ஷரம் என்னும் கிரந்தத்தி லுள்ள வரிசை கிரமத்தையே அங்கீகரித்து ஒரு சந்ததி இல்லாத ஸ்திரீக்கு அவருடைய புருஷனின் சகோதரன் அல்லது புருஷனின் சகோதரனுடைய புத்திரன் இவர்களுக்கு முன்பாக அவளுடைய சககளத்தி (அதாவது புருஷனுடைய மற்றொரு மனைவி) நெருங்கிய வாரிசென்றும் ஒரு மனைவியானவள் தன்னுடைய புருஷனுக்கு ஒரு சபிண்டரென்று கவனிக்கப்படுவாளாகையால் அவளேதான் தன் சககளத்தியின் சொத்துக்களை அடையவேண்டும் என்றும் தீர்மானித்திருக்கின்றனர். (f)

கமலாக்கர் என்பவர் மேற்கண்ட பிரிவி கௌன்சில் தீர்மானத்தையொட்டி அடியில்கண்டவாறு ஒரு புருஷனுக்கு பிறகு ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன வாரிசுகளின் வரிசையை தெரிவித்திருக்கின்றனர். அதாவது :—

(1) ஒரு ஸ்திரீயின் சககளத்தியின் புத்திரன்.

(2) ஒரு ஸ்திரீயின் சககளத்தியின் பேரன்.

(3) சககளத்தி.

(4) சககளத்தியின் புத்திரி.

(5) புருஷனுடைய மற்ற கோத்ரஜ சபிண்டர்கள்.

(6) புருஷனுடைய இதர பந்துக்கள்.

மேலேகண்ட வாரிசைக்கிரமமானது பொம்பாய் ஹைக்கோர்ட்டில் அங்கீகரிக்கப்பட்டு ஒரு கேஸில் (g) ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்துக்கு அவளுடைய சககளத்தி அல்லது புருஷனின் சகோதரனுடைய புத்திரன் இவர்களைக்காட்டிலும் சககளத்தியின் பேரன் நெருங்கிய வாரிசென்று தீர்மானித்திருக்கின்றனர். மற்றொரு கேஸில் ஒருஸ்திரீயின் மாமனாருடைய சகோதரரின் பேரப்பிள்ளையைக் காட்டிலும் சககளத்தி நெருங்கிய வாரிசென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.(h)

---

(f) கேசர்பாய் vs. ஹன்ஸ்ராஜ் 30 Bom. 431.
(g) கோஜிபாய் vs. ஷாஹஜீராவ் 17. Bom. 114.
(h) கிருஷ்ணபாய் vs ஸ்ரீபதி 30. Bom. 333.

மற்றும் ஒரு கேஸில் ஒரு ஸ்திரீயின் புருஷனுடைய பின்னோதாரைக் காட்டிலும் சகோதரார்கள் நெருங்கிய வார்சென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது(i). இன்னொரு கேஸில் ஒரு ஸ்திரீயின் பின்னோதானைக் காட்டிலும் அவளுடைய புருஷனின் சகோதரன் நெருங்கிய வார்சென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது(j). சென்னை ஹைகோர்ட்டிலும் மேலே சொல்லப்பட்ட வார்சு வரிசைக் கிரமமானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஒரு ஸ்திரீயின் சகோதரனுடைய மகனைக்காட்டிலும் சஹகளத்தியின் மகன் நெருங்கிய வார்சென்று தீர்மானித்திருக்கின்றனர்(k). சென்னை ஹைக்கோர்ட்டில் மற்றொரு கேஸில், ஒரு ஸ்திரீயின் புருஷனுடைய சகோதரரின் மகளின் புத்திரன் அவளுடைய சகோதரியின் புத்திரியின் புத்திரனைக் காட்டிலும் உயர்ந்த வார்சென்று தீர்மானித்திருக்கின்றனர்(l). இன்னொரு கேஸில் ஒரு ஸ்திரீயின் புருஷனுடைய நேரான சபிண்டரைக் காட்டிலும் சஹகளத்தியின் புத்திரி மேலான வார்சென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது(m).

அசுர விவாகத்தினுல் மணம் புரிந்துக்கொள்ளப்பட்ட ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்துக்கள் அவளுடைய பெற்றோர்களுக்கும் பெற்றோர் தவறும் பக்ஷத்தில் இதர பந்துக்களுக்கும் சேருவதாகுமென்று சொல்லப்பட்டது. இதர பந்துக்களாவது, அவளுடைய சகோதரியின் புத்திரன், அவளுடைய புருஷனின் சகோதரனுடைய புத்திரன், அவளுடைய சகோதரனுடைய புத்திரன், அவளுடைய மருமகன், அவளுடைய புருஷனின் சிறிய சகோதரன் இவர்கள் முறையே வார்சுகளாவரென்று சொல்லப்பட்டுள்ளது. ஆனுல் இவர்கள்தான் முடிவான வார்சுகள் என்றும் இவர்களைத் தவிர வேறே வார்சுகள் கிடையாது என்றும் சொல்வதற்கில்லை. தூரமான பந்துக்களின் விஷயமாக, சகோத்திரத்தையுடையவர்கள் மற்ற பந்துக்களை காட்டிலும் முதன்மையாக இருந்து ஸ்திரீதன சொத்துக்களைப் பெறுவார்கள். கோத்ர சபிண்டர்களுடைய மனைவிகளும் சமனோதகர்களுடைய மனைவிகளும் தங்களுடைய கணவர்களுக்குச் சமானமாக ஸ்திரீதன சொத்துக்களை

(i) பரமப்ப vs. சித்தப்பா 30 Bom 607.
(j) குணமணி vs. பிரசன்ன 23. C. W. N. 1038
(k) பிரம்மப்பா vs. பாபம்மா 30 Mad 18.
(l) வெங்கடசுப்பிரமணியம் vs. தாயம்மா 21. Mad 263
(m) மரியா vs. சிவபாக்கியம் 36. Mad 116.

பெறுவார்கள் (n). அகமுடையருடைய ஜாதியின் வழக்கப் பிரகாரம் சந்ததியில்லாத ஒரு விதந்துவினுடைய ஸ்திரீதன சொத்துக்கு அவளுடைய புருஷனின் பந்துக்களைக் காட்டிலும் அவளுடைய பெற்றோர்கள் நெருங்கிய வார்சாவார்கள் என்று சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு கேஸில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (o).

சுல்கம் சேரும் விதம்.

மேலே 2-வது அத்தியாயத்தில் அனேக விதங்களான ஸ்திரீதன சொத்துக்களைப்பற்றி சொல்லப்பட்டுள்ளது. அவைகளில் சுல்கமென்பது ஒரு விதமான ஸ்திரீதனமாகும். சுல்கமென்பது ஒரு ஸ்திரீயை அல்லது கன்னிகையை விவாகம் செய்துக் கொள்வதற்காக அவளைமணம் புரிபவர் கொடுக்கும் கிரயபணமாகும். ஒரு தொகையானது சுல்கமென்றுவது அல்லது யாதொரு சொத்து சுல்கம் என்னும் தொகையிலிருந்து வாங்கப்பட்ட சொத்து என்றுவது ஏற்படும் பக்ஷத்தில், அந்த ஸ்திரீதன சொத்தானது அவளுடைய காலத்திற்கு பிறகு அவளுடைய உடன் பிறந்த சகோதரனுக்கும் அப்படிப்பட்ட சகோதரன் இல்லாவிட்டால் அவளுடைய தாயாருக்கும், தாயார் இல்லாவிட்டால் தகப்பனுருக்கும் இவர்கள்யாரும் இல்லாவிட்டால் அவளுடைய இதர ஸ்திரீதன வார்சுகளுக்கும் சேருவதாகும். சென்னை மாகாணத்தில் ஸ்மிருதி சந்திரிகா என்னும் கிரந்தமானது வழங்குகிறது. அந்த கிரந்தத்தின் பிரகாரம் ஒரு ஸ்திரியின் தாயார் முதல் முதலாகவும் தாயாருக்குப் பிறகு சகோதரனும் சுல்கம் என்னும் ஆஸ்தியை அடைவதற்கு பாத்தியஸ்தராவார்கள்.

இன்னும் சென்னை மாகாணத்தில் சில ஸ்திரீதன சொத்துக்களின் விஷயமாக தனியானதோர் வார்சு முறைமையானது அனுசரிக்கப்பட்டுவருகிறது. அதாவது யௌதகம் என்னும் ஸ்திரீதன சொத்தானது முதல் முதலாக ஒரு ஸ்திரீயின் விவாகமாகாத பெண்களுக்கு சேருவதாகும். அன்வதேயகம், அத்தியவேதநீகம், என்னும் ஸ்திரீதன சொத்துக்கள், ஒரு ஸ்திரீக்கு பிள்ளைகளும் விவாகமாகாத புத்திரிகளும் இருக்கும் பக்ஷத்தில், அவர்களுக்குள் சமபாகமாகவும் இவர்கள் யாவரும் இல்லாத பக்ஷத்தில் புத்திரியின் சந்ததிகளாலும் புத்திரனுடைய புத்திரனாலும் அடையப்படும். விதந்துவாயிருக்கும்

(n) லக்ஷ்மீபாய் vs. ஜயராம் 6 Bom. H. C. Repo.ts 152.
(o) வெள்ளச்சாமி vs. மாமுண்டி 23 I. C. 124.

பெண்கள் ஸ்திரீதன சொத்துக்களை பெறுவதற்கில்லை. கோத்ரஜ சபிண்டர்களுடைய விதந்துக்களும் மேலே சொல்லப்பட்ட விதங்களான ஸ்திரீதன சொத்தை பெறுவதற்கில்லை.

யௌதகம் என்னும் சொத்தைச் சேர்ந்தவரையிலும் மனு ஸ்மிருதியில் அவைகள் விவாகமாகாத புத்திரிகளால் தான் அடையப் படவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. அன்வதேயக ஸ்திரீதனமானது (அதாவது ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷனிடமிருந்தாவது அல்லது தன் புருஷனுடைய குடும்பத்தினரிடமிருந்தாவது தானமாக அடையப்பட்ட சொத்துக்கள்.) அவளுடைய சொந்த ஜனனிகளுக்கு சேருவதாகுமென்று மனு ஸ்மிருதியில் சொல்லப்பட்டுள்ளது. இதை பொட்டியே சென்னைமாகாணத்தில் கேசுகளை தீர்மானித்திருக்கின்றனர். ஒரு கேஸில்(a), ஒரு ஸ்திரீயின் புத்திரர்களும், புத்திரிகளும் சமபாகமாக அன்வதேயகய ஸ்திரீதனத்தை பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு கேஸில், ஒரு பேரனைவிட ஒரு புத்திரன் மேலான வார்சென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது(b). ஒரு சஹகளத்தியின் புருஷன் அன்வதேயக ஸ்திரீதன சொத்துக்கு அடியோடே வார்சாகமாட்டாரென்று சொல்லப்பட்டுள்ளது(c). புத்திரிகளை சேர்ந்தவரையிலும் விவாகமாகாத புத்திரிகள் விவாகமான புத்திரிகளைவிட உயர்ந்தவார் சென்று அநேக கேசுகள் தீர்மானித்திருக்கின்றன(d). கோத்ரஜ சபிண்டர்களுடைய விதந்துக்கள் அன்வதேயக ஸ்திரீதன சொத்துக்களை அடைவதில்லை யாதலால் ஒரு ஸ்திரீயின் சகோதரனுடைய விதந்துவானவள் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்களுக்கு ஒரு வார்சு ஆகமாட்டாள்(e). அதே மாதிரியாகவே ஒரு ஸ்திரீயின் மருமகன் அவளுடைய அன்வதேயக ஸ்திரீதன சொத்துக்களுக்கு வார்சாக மாட்டார்(f).

---

(a) ஆஷாபாய் vs. ஹாஜிடைப் ஜி9 Bom 115.

(b) டௌலத்ராம் vs. நாராயணதாஸ் 60 I. C 929.

(c) பீமாசாரியா vs. ராமாசாரியா 33 Bom 452.

(d) டயால்தாஸ் vs. சாவித்திரிபாய் 34 Bom. 335.
முத்து vs. தொரசிங்கா 3 Mad. 290.
செங்கமலத்தம்மாள் vs. வேலாயுதம் 3. M. H. C. R. 312.
வெங்கட்ராமா vs. புஜங்க 19. Mad. 107,

(e) கனகம்மாள் vs. ஆனந்ததி. 37 Mad. 293.
தாயம்மாள் vs. அண்ணாமலை 19. Mad. 35.

(f) பந்தம். vs. பந்தம் 4 Mad. H. C. R. 180.

## 5-வது அத்தியாயம்.

### சோர புத்திரிகளின் ஸ்திரீதன வார்சு முறைமை.

நாம் இதுவரையிலும் ஸ்திரீகளுடைய ஸ்திரீதனமானது, அவர்களுடைய காலத்திற்குப் பிறகு எவ்வெப்படி வார்சுகளால் அடையப் படும் என்பதைப் பற்றி சொல்லி வந்தோம். இது வரையிலும் சொல்லப்பட்ட வார்சுகளில், புத்திரர்கள், புத்திரிகள் இவர்கள். ஒரு ஸ்திரிக்கு கிரமமாக அதாவது அவளுடைய விவாகமான புருஷனுக்குப் பிறந்த புத்திரர்கள் அல்லது புத்திரிகள். ஸ்திரீகள் சிற்சில சமயங்களில் நெறிதவறி தங்களுடைய புருஷர்கள் உயிருடன் இருக்கும் போதாவது அல்லது அவர்கள் இறந்த பிறகாவது இதர புருஷர்களுடன் சேர்ந்து புத்திர புத்திரிகளை பெற்றுக்கொள்கிறார்கள். ஹிந்து சட்டப் பிரகாரம் ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷன் உயிருடன் இருக்கையில் மற்றொரு புருஷனை விவாகம் செய்து கொள்வதற்கில்லை. 1850-ம் வருஷத்திற்கு முன் ஹிந்து விதந்துகள் மறு விவாகம் செய்வது சட்ட விரோதமாக இருந்தது.

ஆனால், 1850-ம் வருத்தில், இந்தியா சட்ட சபையானது ஹிந்து விதந்துக்கள் மறு விவாகம் செய்துகொள்வதை அங்கீகரிப்பதற்காக ஒரு சட்டத்தை நடந்தேற்றி அவ்வருஷம் முதல் அதை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கின்றனர். அந்த சட்டத்தின் பிரகாரம் ஒரு ஹிந்து விதந்து, மற்றொரு புருஷனை விவாகம் செய்து கொள்வது சட்டசம்மதமாகுமென்றும், அவளுக்கு தன்னுடைய இரண்டாவது புருஷனின் ஆஸ்திகளை அடையவும் தன் புத்திர புத்திரிகளுக்கு அவை சங்கிரமிக்கும்படி செய்யவும் உரிமை உண்டென்றும், ஆனால் தன் முதல் புருஷனுடைய சொத்துக்களை அடைவதற்கில்லையென்றும் உள்ளது. ஆகையால், சட்டப்பிரகாரம் அவளுக்கு மறு விவாகமான பிறகு, தமது புருஷனால் பிறந்த சந்ததிகள் கிரமமான சந்ததிகளென்று சொல்லப்படுவார்களே யொழிய சோர சந்ததி யென்று சொல்லப்படாது. ஒரு ஸ்திரீ, தன் புருஷன் உயிருடன் இருக்கையில் இதர புருஷர்களுடன் சேர்க்கையினால் பெற்ற புத்திர புத்திரிகளும் தன்னுடைய புருஷன் இறந்த பிறகு மறு விவாகம் செய்து கொள்ளாமல் இதர புருஷர்களுடன் சேர்க்கையினால் பெற்ற புத்திர புத்திரிகளும் சோர சந்ததிகளெனப்படுவார்கள். இத்தகையபுத்திர புத்திரிகளுக்கு ஏதாவது வார்சு உரிமையுண்டா? இவ்விஷயத்தைப்

பற்றி ஸ்மிருதிகளும், ஹைகோர்ட்டுகளும் எவ்வாறு கூறி யிருக்கின்றன என்பதைப்பற்றி இவ்வத்தியாயத்தில் கவனிப்போம்.

### விபசாரிகள் அல்லது தாஸிகளுக்கு வார்சு முறைமை.

தென்னாட்டில், குலஸ்திரீகள் அதாவது இல்லற வாழ்க்கையில் அமர்ந்திருக்கும் ஸ்திரீகளை தவிற, தாஸிகள் என்றும், தாஸித் தொழிலைக் கைப்பற்றி வருபவர்களென்றும் சில ஸ்திரீகள்உள்ளனர். இவர்களுடைய தொழில் விபசாரம். இதனாலேயேதான் இவர்களுக்கு ஜீவனம். இவர்களுக்கு புருஷர்களென்பது கிடையாது. ஆனால், இவர்கள் ஹிந்து சட்டத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு அடங்கினவர்களாக கருதப்படவில்லை யெனினும் அவர்களும் ஹிந்து ஆசாரவழுக்கங்களையே அனுசரித்து வருவதால் அவர்களுடைய வார்சுகளைப்பற்றியும் முதலாவதாக கவனிப்போம்.

தாஸித் தொழிலை ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டிருக்கும் ஸ்திரீகளுக்கு பிறந்த புத்திரிகளும், புத்திரர்களும், அவர்களுடைய சொத்துக்களுக்கு வார்சாவார்கள். ஆனால், புத்திரிகள் முதல் முதலாவதாகவும் புத்திரிகள் இல்லாவிட்டால் புத்திரர்கள் இரண்டாவதாகவும் அவர்களுடைய சொத்துக்களை அடைவார்கள். புத்திரர்கள் அல்லது புத்திரிகள் யாவரும் இராதபக்ஷத்தில் அவர்களுடைய குலத்தில் எவ்வாறான ஆசார வழக்கம் உண்டோ அதன் பிரகாரம் அவளுடைய சொத்துக்கள் சங்கிரமிப்பதாகும். தாஸிகளுடைய சொத்துக்களை அவர்களுடைய புத்திரி புத்திரர்கள் அடைவதென்பது சாதாரணமாக ஒரு ஸ்திரீயினுடைய சொத்துக்கள் அவளுடைய வயற்றில் பிறந்த ஜனனிகளுக்கே சேரவேண்டுமென்கிற உலக நியாயத்தை யொட்டினதாகும். (a).

### மற்ற விபசாரிகளின் வார்சுகள்.

ஆனால், இல்லறவாழ்க்கையானரீதியில் இருந்துகொண்டு விபசாரத்தனத்தில் இறங்கி யிருக்கும் ஸ்திரீகளுடைய சொத்துக்களை எவ

(a) காமாக்ஷி vs. நாகரத்தினம் 5 M. H. C. R. 161.
நரசண்ண vs. கங்கு 13 Mad 133.
அருணகிரி vs. ரங்கநாயகி 21 Mad 40.
சுப்பராயன் vs. ராமசாமி 23 Mad. 171.
மீனாக்ஷி vs. முனியாண்டி 33 Mad. 1144.

ரெவர்கள் அடைவது என்பதைப்பற்றி பல சந்தேகங்கள் இருந்துவந்தன.

நாரத ஸ்மிருதியின் ஒரு வியாக்கியானத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது :—

"ஒரு புத்திரனையுடைய விதந்து, ஸ்திரீதன சொத்தைப் பெற்றிருந்து மோக பாசத்தினால் சீரழிந்து தன்னுடைய புத்திரனை விட்டுவிட்டு மற்றொரு புருஷனுடன் சேருவாளாகில், அவளுடைய ஸ்திரீதன சொத்தானது அவளுடைய புருஷனுக்குச் சேருமேயொழிய புத்திரனுக்குச் சேராது.

ஆனால், யாதொரு ஸ்திரீதன சொத்தைப் பெற்றிராத ஒரு ஸ்திரீ தன்னுடைய புருஷனின் சொத்துக்களோடு மற்றொரு புருஷனைச் சேருவாளாகில், அந்த சொத்துக்கள் புதிய புருஷனைச் சேராது அந்த சொத்துக்களை அடைவதற்கு அவளுடைய புத்திரனுக்கு உரிமையுண்டு'.

இந்த வியாக்கியானமானது, ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்துக்கள், அந்த ஸ்திரீ தன் புருஷன் இறந்த பிறகு விபசாரியாகும் பக்ஷத்தில் அவளுடைய புத்திரர்களைச் சேராது என்று கூறுகிறது. ஆனால் ஸ்மிருதிகளில் இதைப்பற்றி விவரமாக பிரமாணங்கள் அதிகமாக கிடையாது. பொதுவாக சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைக் கொண்டு கோர்ட்டுகள் அடியில் கண்டவாறு தீர்மானித்திருக்கின்றனர்.

ஒரு ஸ்திரிக்கு புத்திர புத்திரிகள் விபசாரத்தினால் பிறந்ததினாலேயே அவர்கள் ஸ்திரிதன சொத்துக்களை அடைவதற்கில்லையென்று சொல்லுவதற்கில்லை. ஆனால், அவளுடைய வார்சுகளின் வரிசை கிரமமானது பின் வருமாறாகும் :—

1. கிரமமாக (தன் சொந்த புருஷனுக்கு)ப் பிறந்த மகள்.
1. கிரமமாக (தன் சொந்த புருஷனுக்கு)ப் பிறந்த மகன்.
3. சோர புத்திரி.
4. சோர புத்திரன்.
5. அவளுடைய இதர ரத்த சம்பந்தமுள்ள பந்துக்களும், உறவினர்களும்.

ஒரு ஸ்திரியானவள் தன் புருஷன் உயிருடன் இருக்கையில், விபசாரம் செய்துகொண்டிருக்க, அவ்விபசார வாழ்க்கைக் காரணமாகக் கொண்டு அவளுடைய விவாகமானது சட்ட பூர்வமாக ரத்து செய்யப்படாமலிருக்கும் பக்ஷத்தில், அவளுடைய சோர புத்திரர்களுக்குப்

பிறகு அவளுடைய இதர ரத்த சம்பந்தமுள்ள பந்துக்களைக்காட்டிலும் அவளுடைய புருஷனும், புருஷனுடைய சபிண்டர்களும் அவளுடைய ஸ்திரீதன சொத்தைப் பெறுவார்கள். கிரமமாகவோ அல்லது சோரமாகவோ பெற்ற புத்திர புத்திரிகள் ஒருவரும் இல்லாவிட்டால், ஒரு ஸ்திரீ சட்டப்படி ஸ்வீகாரம் செய்துகொண்டிருக்கும் நபர் அவளுடைய ஸ்திரீதன சொத்துக்கு வார்சாவார்.

பொதுவாக, ஸ்மிருதிகளிலாவது அல்லது வேறே வியாக்கியான கிரந்தத்திலாவது ஒரு விபசாரத்தனமுள்ள ஸ்திரீக்கு அவளுடைய ஜனனிகள் வார்சுகளாக இருக்கமுடியாதென்று யாதொரு பிரமாணமும் இல்லை யாதலால், கோர்ட்டுகள் நியாயத்தையும் மனித சுபாவத்தையும் ஒட்டி ஒரு ஸ்திரி எத்தகையான நடத்தையையுடைய வளாயிருந்த போதிலும் அவளுடைய ஜனனிகள் அவளுக்கு வார்சாக இருப்பார்கள் என்று தீர்மானித்திருக்கின்றனர்(b).

ஒரு ஸ்திரீயின் நடத்தையானது விபசாரத்தனமாக இருக்கிறதென்னும் காரணத்தினாலேயே கோர்ட்டினால் அவள் விபசாரியென்று கவனிக்கப்படமாட்டாள். அவளுடைய விபசாரத்தனத்தைக் காரணமாகக்கொண்டு அவள் ஜாதியிலிருந்து நீக்கப்பட்டிருக்கவாவது வேண்டும், அல்லது அவளாகவே ஜாதியை அல்லது குலத்தை இழந்தவளாக தம்மைத்தாமே பாவித்து வந்ததாகவாவது சந்தர்ப்பங்களினால் மிகவும் நன்முக ஏற்படவேண்டும். தவிரவும், அவளுடைய உறவினர்கள் யாவரும் அவளை தம்முடைய பாந்தவ்வியத்திலிருந்து நீக்கிவிட்டதாக சரியான சாக்ஷியம் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் அவள் விபசாரியெனக் கருதப்படுவாள்(c). ஒரு ஸ்திரி தன் குலத்தில் தாழ்வுபட்டதினாலேயே அவளுடைய பந்துத்வ சம்பந்தமான்து போய்விடாது. அப்படிப்பட்ட ஸ்திரீயினுடைய சொத்துக்களை அடைவதற்கு அவளுடைய ரத்த சம்பந்தமுள்ள பந்துக்கள் விவாக சம்பந்த பந்துக்களைவிட மேலான பாத்தியதையை உடையவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆகையால் அவளுடைய தாய் மாமனைவிட அவளுடைய இறந்து போன புருஷனின் சகோதரர்கள் நெருங்கிய வார்சாவார்கள்(c). இந்த கேஸில், ஒரு ஜாதி பிரஷ்டமான ஸ்திரிக்கு அவளுடைய ரத்த சம்பந்தமான உறவினரைக்காட்டிலும் புருஷ

---

(b) மைனுபாய் vs. உத்தராம்சிங் 8 M. I. A. 400.
(c) கோதண்டராம நாயுடு vs. சுப்பையர் 52 M. L. J. 514.

னுடைய சகோதரர்கள் வார்சாவார்கள் என்றுள்ளதினல், அவளுடைய விவாக அந்தஸ்தானது சட்டப்பிரகாரம் ரத்து செய்யப்படவில்லை என்றர்த்தமாகும்.

ஒரு ஹிந்து ஸ்திரீ விபசாரத்தனமுடையவளாக இருப்பதினலேயே தன்னுடைய ஜாதி அல்லது குலத்தை இழந்துவிடுவதில்லை என்பதற்கு ஆதாரமாக மேலே சொல்லப்பட்ட கோதண்டராம நாயுடு vs. சுப்பையர்(c). என்னும் கேஸைத்தவிர அநேக தீர்மானப்பிரமாணங்கள் உள்ளன(d). ஹீராலால் vs. திரிபுரா(e) என்னும் கேஸில் ஒரு ஸ்திரீ விபசாரத்தினல் சம்பாதித்த சொத்தானது அவளுடைய காலத்திற்குப் பிறகு அவளுடைய சகோதரனின் மகனுக்குச் சேருமா என்னும் கேள்வி வந்ததில், சேரும் என்று தீர்மானித்திருக்கின்றனர். ஆனல் எக்காரணத்தைக் கொண்டும் அந்த ஸ்திரீக்கு தன் வயிற்றில் பிறந்த புத்திரன் அல்லது புத்திரி இருப்பின் அவர்களை விட்டு அவளுடைய சொத்துக்கள் வேறொருவருக்குச் சேருவதற்கில்லை.

ஹீராலால் vs. திரிபுரா (e) என்னும் கேஸில் மற்றொரு அம்சம் ஏற்பட்டுள்ளது. அதாவது, ஒரு ஸ்திரீ விபசாரத்தினலாவது அல்லது வேறே நியாயமான அல்லது சரியான வழியிலாவது சம்பாதிக்கும் சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதன சொத்தாகும் என்றும் அந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதன வார்சுகளுக்கே சேருவதாகும் என்பது. இதேமாதிரியாக மற்றொரு கேஸிலும் தீர்மானித்திருக்கின்றனர்(f). இந்த கேசில், ஒரு ஸ்திரீ, தன் நியாய புருஷனின் மூலமாக ஒரு புத்ரனையும் அதற்குப் பிறகு தன் சோர புருஷனின் மூலமாக (அதாவது முதல் புருஷனுடைய காலத்திற்குப் பிறகு சேர்ந்து கொண்ட புருஷன் மூலமாக) ஒரு பெண்ணையும் பெற்ருள். முதல் புருஷனல் பெற்ற பிள்ளையின் மருமகனுக்கும் (அதாவது சகோதரனுடைய புத்திரன்) சோர புருஷனல் பிறந்த மகளுக்கும் போட்டி வந்ததில் மகளுக்குத்தான் அந்த சொத்தானது சேரும் என்று தீர்மானித்திருக்கின்றனர்.

---

(c) கோதண்டராம நாயுடு vs. சுப்பையர் 52 M. L. J. 514.
(d) வேதம்மாள் vs. வேதநாயக முதலியார் 31 Mad. 100.
சுப்பராயப்பிள்ளை vs. ராமசாமிப் பிள்ளை 23 Mad. 171.
(e) ஹீராலால் vs. திரிபுரா 40 Cal. 650. (F. B)
(f) மஹாராணு vs. தாகூர் பிரசாத் 14 O. C. 234.

சென்னை ஹைகோர்ட்டில், ஒரு ஸ்திரி இல்வாழ்க்கை ஸ்திதியில் இருந்துகொண்டு ஒரு புத்திரனைப் பெற்ற பிறகு விபசாரமாகச் சென்று ஒரு சோர புத்திரன் அல்லது புத்திரியைப் பெறும்பக்ஷத்தில் இவர்களிருவர்களில் எவர் அவளுடைய ஸ்திரீதன சொத்தைப் பெறுவதற்கு பாத்தியஸ்தர்களென்னும் கேள்வி வந்ததில், முதலில் கிரமரீதியில் (legitimate) பிறந்த புத்திரன்தான் சட்டசம்மதமான வார்சுஎன்றும் சோர புத்திரன் அல்லது புத்திரி வார்சு அல்லவென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது(g). கிரமமான வாழ்க்கையிலிருக்கும் போது பெற்றிருக்கும் யாதொரு புத்திரன் இராமலிருக்கும் பக்ஷத்தில்தான் சோர புத்திரர் வார்சுகளாவார்களென்று ஏற்கெனவே வெகு நாட்களுக்கு முன்பாக ஒரு பிரிவிகௌன்சில் கேஸில்(h) தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சோரபுத்திரர்களுக்கு அல்லது சோர புத்திரிகளுக்கு தங்களுடைய தாயாருடைய சொத்தானது சேரும் என்று சொல்வதானது யாதொரு ஸ்மிருதி முதலியவைகளை யொட்டினதல்ல. காஸி புத்திர புத்திரிகள் தங்களுடைய தாயாருடைய சொத்துக்களை அடைகிறார்களே என்பதைப் பொருந்தினதுமல்ல. ஆனால் சாதாரண உலக நியாயத்தை யொட்டினதாகும். காஸி புத்திர புத்திரிகள் தங்கள் தாயாருடைய சொத்துக்களை அடைவதென்பது அவர்களுக்குள் உள்ள ஆசார வழக்கத்தைப் பொருந்தினது(i).

ஒரு கேஸில், விபசாரத்தனமானது, ரத்த சம்பந்தமான பாத்தியதையை அடியோடு ரத்து செய்து விடாதென்றிருந்த போதிலும், ஒரு மனைவியானவள் விபசாரத்தனத்திற்காக தன் புருஷனைவிட்டு விட்டு 30 வருஷகாலமாக வெளியேயிருக்கும் பக்ஷத்தில், அதனால் அவளுடைய புருஷன் அவளைவிட்டு விட்டதாகவும் விவாகபந்தனமானது ரத்து செய்யப்பட்டதாகவும் பாவிக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது(j).

சோர புத்திர புத்திரிகள் வார்சுகளாக கவனிக்கப்படுவதற்கு காரணம் என்னவென்றால், தங்கள் சொந்த தாயாருக்கு தங்களைவிட நெருங்கிய பாத்தியஸ்தர் கிடையாதென்னும் ஒரு நியாயம் தான். ஆனால் இந்த நியாயமானது அவர்களுடைய சொந்த தாயாருடைய

(g) சுப்பமுயா vs ராமசாமி 20 Mad. 171.
(h) மைனுபாய் vs. உத்தராம் 8 M. I. A. 400.
(i) மீனாக்ஷி vs. முனியாண்டி 38 Mad. 1144.
(j) ராமப்பிரசாத் vs. சுப்புபாய் 4 N. L. R. 31.

சொத்துக்களைப் பற்றி மாத்திரம் பிரயோகிக்கப்படுமே யொழிய தாயாரைப் போன்றவர்களுடைய சொத்துக்களின் விஷயமாக யாதொரு பாத்தியதையும் கொண்டாடுவதற்கில்லை. ஆகையால் ஒரு சூத்திரனுடைய சோரபுத்திரன் தன்னுடைய மாற்றாந்தாயான தன் தகப்பனாரின் கிரமமான மனைவிக்கு ஒரு வார்சாக பாத்தியதை கொண்டாடக்கூடாது(k).

ஒரு கிரமமாக விவாகமான ஸ்திரி, தன் புருஷனுடன் இருக்கையில் ஒரு புத்திரியைப் பெற்றிருந்து பிறகு தன் புருஷனைவிட்டுவிட்டு ஒரு சோரபுருஷனைச் சேர்ந்து ஜாதியை இழந்து புத்திரர்களைப் பெற்றாள். ஆனால் அவளுடைய புத்திரி அவளுடன்கூடவே இருந்தாள். இதனாலேயே அந்த புத்திரியும் தன் பாத்தியதையை இழந்துவிடுவாளா என்றும் அவளுக்கும் சோர புத்திரர்களுக்கும் தங்கள் தாயாரின் சொத்து விஷயமாய் போட்டி வரும் பக்ஷத்தில் அவை எவருக்குச்சேரும் என்பதைப்பற்றியும் கேள்விகள் வந்ததில் சென்னை ஹைகோர்ட்டார் மகளுக்குத் தான் சேரும் என்று தீர்மானித்திருக்கின்றனர்(l). இன்னும் அம்மகளில்லாமல் அவளுடைய புத்திரியிருப்பின் அப்புத்திரிக்குத்தான் சேரும் என்றும் இக்கேஸிலேயே சொல்லியிருக்கின்றனர்.

ஸ்வீகாரமான குழந்தைகளுக்கு வார்சு உரிமையுண்டா என்பது கேள்வி. மற்ற விதமான சந்ததிகள் இராதபக்ஷத்தில் ஸ்வீகார சந்ததிக்கு வார்சு உரிமையானது சங்கிரமிக்கலாம்.

## 6-வது அத்தியாயம்.

### இதர விஷயங்கள்.

ஸ்திரீதன சொத்தானது ஸ்திரீ வார்சுகளுக்கு வார்சு முறைமையில் சேரும் பக்ஷத்தில் அவர்கள் அந்த சொத்தை தங்களுடைய ஜீவதசை வரையிலு மாத்திரம் பெற்று அனுபவிக்க உரிமையுடையவர்களேயொழிய பூரண உரிமையைப் பெறமாட்டார்கள். அவர்களுடைய காலத்திற்குப் பிறகு அந்த ஸ்திரீதன சொத்துக்கள் மூல ஸ்திரீயின் இதர வார்சுகளுக்குச் சேருவதாகும்.

---

(k) அய்யேஸ்வரி ஆனந்தாஜி vs. சிவாஜி 48 Mad. 116.
சுப்ரமணிய vs. ரத்தனவேலு 41 Mad. 44.

(l) மந்தரம் நம்மைய்ய செட்டி vs. மந்தரம் திருவேங்கடத்தான் செட்டி 24 M. L. J. 223.

சாதாரணமாக, ஸ்திரீகள் வார்சு முறையில் ஒரு ஆணிடமிருந்து சொத்துக்களைப் பெறுவார்களாகில், அந்த சொத்துக்கள் அவர்களுடைய ஜீவதசை வரையிலும் மாத்திரம் அவர்களால் அனுபவிக்கத்தக்கதாகுமென்றும் அவர்களுக்குப் பிறகு மூல புருஷனுடைய இதர பாத்தியஸ்தர்களுக்குச் சேருவதாகுமென்று தீர்மானங்கள் ஏற்பட்டுள்ளன. (m). இதே நியாயத்தையும் ஸ்திரீதன விஷயமாக கோர்ட்டுகள் அனுசரித்திருக்கின்றன. (n). அதாவது ஒரு ஸ்திரீயின் ஸ்திரீதனமானது மற்றொரு ஸ்திரீக்கு வார்சு முறைமையில் சேரும்போது அது ஸ்திரீதனம் என்று சொல்லப்படாது என்பது. ஆனால் ஸ்திரீதன சொத்தானது மூல ஸ்திரீக்குள்ள பாத்தியதைகளையே அன்வயிக்குமாதலால் ஒரு தாயாரின் ஸ்திரீதன சொத்தானது மகளைச் சேருமானல், அம்மகளுக்குப் பிறகு அது அவளுடைய மகனைச் சேருமேயொழிய மூல ஸ்திரீயின் மகனுடைய மகனுக்குச் சேராது. (o).

இதுவரையிலும் விபசாரத்தனமான ஸ்திரீயின் ஸ்திரீதன வார்சுகள் எவரெவர்கள் என்பதைப் பற்றி கவனிக்கப்பட்டு வந்தது. ஒரு விபசாரத்தனமுள்ள மகள் தன் தகப்பனார் அல்லது தாயாருடைய சொத்துக்களை அவை ஸ்திரீதனமாயிருந்தாலும் ஸ்திரீதனமாக இல்லாவிட்டாலும் வார்சாக அடைய உரிமையுண்டா என்னும் கேள்வி வந்ததில் சென்னை ஹைக்கோர்ட்டார் அவர்கள், சாஸ்திரங்களில் ஒரு விபசாரத்தனமுள்ள மகள் ஸ்திரீதன சொத்துக்களை வார்சாகப் பெறுவதில் யாதொரு தடையுமில்லையென்று தீர்மானித்திருக்கின்றனர். (p).

ஒரு புருஷன் தன் மனைவியின் ஸ்திரீதன சொத்துக்களை தன் தேக அசௌக்கிய காலத்திலும் வறுமையிலும் உபயோகப்படுத்தலாம் அல்லது விற்கலாமேயொழிய தானே வைத்துக்கொள்வதற்கில்லை. ஆகையால், ஒரு கேஸில், கோர்ட்டில் பணம் செலுத்த வேண்டி ஒரு புருஷன் தன் மனைவியின் ஸ்திரீதன சொத்தான நகைகளை விற்பதற்காக மற்றொருவரிடம் டிபாஸிட்டாக வைத்திருந்தார். பிறகு அந்த நகை விற்கப்படுவதற்குமுன் புருஷன் இறந்துவிட்டார். அந்த ஸ்திரீ அந்த நகைகளை வரப் பெறுவதற்கு தாவா செய்த

---

(m) தாகூர்தேவி vs. ராய்பாலக்ராம் 11 M. J. A. 139.
(n) சிவசங்கர்லால் vs. தேவிசாஹேறு 25 All. 468.
(o) சுப்ரமணியம் vs. அருணாசலம் 28 Mad 1.
(p) அன்னபூர்ணம்மா vs. வெங்கம்மா 51 M. L. J. 387.

பொழுது எவருக்காக தொகை சேரவேண்டுமோ அவர் ஆக்ஷேபனை செய்தார். அந்த நகைகளை பெறுவதற்கு அந்த ஸ்திரீக்கு உரிமையுண்டா என்றும் தன் புருஷனுடைய கடன்தாரரின் ஆக்ஷேபனைக்குட்பட்டு அந்த சொத்தானது மத்தியஸ்தரால் விற்பனை செய்யப்படுமா என்றும் கேள்விகள் வந்ததில், புருஷனானவன் அவைகளை உபயோகிக்கவாவது விற்கவாவது செய்யவில்லையாதலால் அவளுக்கு அந்த நகைகளை வரப்பெற பாத்தியதை உண்டென்று தீர்மானிக்கப்பட்டது. (q).

நாட்டுக்கோட்டை செட்டிமார்களில் ஒரு பெண்ணுக்கு விவாகம் நடக்கும் காலத்தில் அவளுடைய பெற்றோர்கள் அவளுக்கு நகைகளையும் பாத்திரங்களையும் பணமும் கொடுப்பது வழக்கம். அந்த சொத்துக்கள் அவளுடைய ஸ்திரீதனமெனப்படும். அவ்விவாகமான பிறகு அப்பெண்சந்ததியில்லாமல் இறந்துவிடும்பக்ஷத்தில் அந்த ஸ்திரீதன சொத்துக்கள் பெற்றோரைச் சேருமென்று ஒரு ஆசார வழக்கமுண்டு. ஆனால் அந்த ஸ்திரீ ஒரு பெண்ணை விட்டுவிட்டு இறந்துவிடும்பக்ஷத்தில் அப்பெண்ணும் காலமடைந்து போகுமானால், அவளுடைய ஸ்திரீதன சொத்துக்கள் அப்பெண்ணின் தகப்பனைத்தான் சேரவேண்டும். தாயாருடைய தகப்பனையாவது அல்லது சகோதரரையாவது சேராது. அப்படி சேருவது ஒரு ஆசார வழக்கமென்பது நாட்டுக்கோட்டை செட்டிமார்களில் கிடையாது. அப்படி ஒரு ஆசார வழக்கமுண்டென்று ருசுசெய்யப்பட வேண்டுமானால், மிகவும் ஸ்பஷ்டமாக ருசுசெய்யப்படுவதல்லாமல் எல்லோராலும் அவ்வழக்கம் அனுசரிக்கப்பட்டு வருவதாக சாக்ஷியம் இருக்க வேண்டும். (r).

வார்சு விஷயங்களில், ஒரு நபர் பிறவிப் பைத்தியம் அல்லது மந்த புத்தியாயிருக்கும்பக்ஷத்தில் அவர் சொத்துக்களை அடைவதற்கில்லை. அதே மாதிரி ஒரு ஸ்திரீயும் வார்சாக இருந்தும் மேலே சொல்லப்பட்ட யோக்கியதைக் குறைவுகளைப் பெற்றிருப்பின் ஸ்திரீதன சொத்துக்களை வார்சாகப் பெறுவதற்கில்லை. ஒரு வரிசையில் ஒருவர் தப்பினால் அவருக்கடுத்த நபர் அல்லது ஸ்திரீ வார்சாவாள்.

ஸ்திரீதனம் முற்றிற்று.

---

(q) நம்மாள்வார் செட்டி vs. பெருந்தேவி தாயாரம்மாள் 53 M. L. J 902.

(r) பழனியப்ப செட்டி vs. சொக்கலிங்கம் செட்டி I அகில இந்தியா லா ஜர்னல் ரிப்போர்ட்டுகள் 397-வது பக்கம்.

தயவுசெய்து தங்கள் சிநேகிதர்களுக்கு காட்டுங்கள்.

# அகில இந்தியா லா ஜர்னல்,

## ஓர் உயர்ந்த மாதாந்திர சட்டப் பத்திரிகை.

முந்துங்கள்! வெகு சிறந்தது! தமிழ் நாட்டு மக்களுக்கு

வெகு பிரயோசனமானது.

**வக்கீல்களால் அழகிய நடையில் எழுதப்பெற்று உயர்ந்த**
**கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு வரப்படுவது.**

மாதம் 1-க்கு 64 பக்கங்களுக்கு குறையாமல் அரிய சட்ட விஷயங்களும் ஹைகோர்ட்டில் தீர்மானமான சட்ட நிரூபண கேஸுகளும் வெளிவருகிறது.

இக்காலத்தில், ராஜீய விஷயங்களிலும், மற்ற பெரிய வியவஹார விஷயங்களிலும், வியாபார விஷயங்களிலும், யாவரும் தமது நுண்ணறிவைச் செலுத்திவருகையில், ஒவ்வொருவரும் தம்முடைய ராஜீய உரிமை, கடமை அந்தஸ்து முதலியவைகளில் தேர்ச்சிபெற்று தம்மையும் தமது நாட்டின் மக்களையும் நாட்டின் பெருமையும் கௌரவமாகவும் மதிப்புடனும் பாராட்டி வருவது மிகவும் இன்றியமையாத ஒரு அவசியமாகும். மேல்நாடுகளில் எங்கு பார்த்தாலும் சுயராஜ்ஜியமென்றும், ஜனசமூக ஆட்சியென்றும், ஜனநாயக உத்தியோகமென்றும், வழங்கப்பட்டு, அரசாங்கத்தார்களும் ஜனங்களுடைய நன்மையும் சௌகரியத்தையும் சரிவர கவனித்து வருவதின் காரணம் என்னவென்றால், ஒவ்வொரு நாட்டு வாசியும் தமது உரிமையை நன்கு உணர்ந்து வருவதல்லாமல் தமது வியவஹாரங்களில் மிகவும் திடஸ்தனாகயிருப்பதுபற்றி அவருடைய அபிப்பிராயத்தை கட்டாயமாக அதிகாரவர்க்கத்தினர் மேற்கொண்டு அரசாங்கத்தை நடத்திவருவதினால்தான். நமது நாட்டில் இம்மாதிரியான ஒரு அந்தஸ்தையடைய ஒவ்வொருவரும் பொதுவாக தமது வியவஹார உரிமைகளில் மிகவும் தேர்ச்சியடைந்திருப்பது மிகவும் அவசியமாகும். நமது தமிழ்நாட்டு மக்கள் இவ்வாறு ஒருவித தேர்ச்சியையடைய ஒரு பெருந்தடையாக இருப்

பது எதுவென்றால், அரசாங்கத்தில் சகல வியவஹாரங்களும் மற்று முள்ள நடவடிக்கைகளும் நடந்தேறிவரும் ஆங்கில பாஷையை பெரும் பாலானோர் நன்கு அறியாமலிருப்பதுதான். இதுவே, நமது மக்கள் சட்டங்களிலும் வியவஹாரங்களிலும் நல்ல பயிர்ச்சியடைவதை தடை செய்வதாயிருக்கிறது. இவ்வாறுள்ள குறையை நீக்குவதற்கு, தமிழில் சட்டங்களும் வியவஹாரங்களும் சட்ட அம்சங்களும் நிறைந்த ஒரு பத்திரிகை மிகவும் அவசியமென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. "அகில இந்தியா லா ஜர்னல்" ஒருவாறு இக்குறையை நீக்கி ஆங்கில மறியாத தமிழ் மக்களுக்கு சட்ட அம்சங்களை நன்கு போதித்து ஒவ் வொருவரையும் தமது செல்வாக்கிலும், திடத்திலும், புத்தியிலும், பொறுப்பிலும் உயர்ப்பிக்கும் என்று நாம் சொல்லத் துணிகிறோம்.

நமது "அகில இந்தியா லா ஜர்னல்" பத்திரிகையில், ஒவ்வொரு மாதமும் சென்னை, பம்பாய், கல்கத்தா, அலஹாபாத், ரங்கூன் முதலிய ஹைகோர்ட்டுகளிலும், பிரிவிகௌன்சிலிலும், ஹிந்து சட்டம், மகம்மதிய சட்டம், குற்றங்களின் சட்டம், சிவில் கோர்ட்டுகளில் நடக்கும் வியவஹாரரீதி, கான்ட்ராக்ட் ஆக்டு, (வியாபார ரீதிகளில் நடக்கும் சாமான்கள் விற்பனை, கொதுவை, ஏஜெண்டுகளின் அமைப்பு முதலியவை அடங்கிய சட்டம்) நெகோஷியபில் இன்ஸ்ட்ருமெண்டு ஆக்டு (உண்டி, புரோநோட், செக்கு இவை சம்பந்தமான சட்டம்)டிரான்ஸ்பர்ஆப்பிராபர்ட்டி ஆக்டு (விக்கிரயம்,அடமானம்,தானம், இவைகளைப் பற்றின சட்டம்) எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்டு (ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், சுரோத்திரியதார்கள், ஜாகீர்தார்கள் இவர்களைப் பற்றின சட்டம்) முதலிய இன்னும் பலவிதமான சட்டங்களின்கீழ் தீர்மானிக்கப்படும் கேஸுகளும் கேஸுகளின் குறிப்புகளும் இனிமையான தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருவதல்லாமல்,சென்னை ஸ்தல ஸ்தாபன சுயஆட்சி, ஓட் உரிமை, கோர்ட்டுகளில் வியவஹாரம் நடத்தும்வகை, கோவாபரேஷன் என்னும் ஐக்கிய நாணய சங்கக் கிளர்ச்சி, கவர்மெண்டின் அமைப்பு, அதிகார எல்லை முதலிய அரிய பெரிய விஷயங்களைக் குறித்து உயர்ந்த வியாசங்களும் வெளிவருகின்றன. நமது ஜர்னல், ஜமீன்தார்கள், உண்டிக்கடை வியாபாரிகள், மிட்டாதார்கள், சுரோத்திரியதார்கள், லோகல்போர்டு மெம்பர்கள், ஹானரரி மாஜிஸ்ட்ரேட்டுகள், பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், பெடிஷன் எழுதுவோர் இன்னும் மற்றும் வியவஹாரஸ்தர்கள் இவர்களுக்கு மிகவும் உபயோகமானது.

எமது ஜர்னலுக்கு ஏப்ரல் மாதமுதல் மார்ச்சு மாதம் வரையிலும் ஒரு வருஷக் கணக்கு. ஒரு வருஷ சஞ்சிகைகளின் பக்கங்களைப் பிரித்துத் தனியாக சுமார் 800-பக்கங்கள் அடங்கிய ஒரு வால்யூமாக பைண்டு செய்யும்படியான ஏற்பாட்டுடன் நடந்து வருகிறது.

நாம் இத்துடன் எமது ஜர்னலின் சில மாதிரிப் பக்கங்களை வைத்திருக்கிறோம். இதுவே ஒரு முழு சஞ்சிகையல்ல. மாதிரிப் பக்கங்களே உங்களுக்குப் பத்திரிகையின் பூரண உருவத்தை ஒருவாறு தெரிவிக்கும் என்று நம்புகிறோம் காகிதத்தின் விலை மிகவும் உயர்ந்ததாயிருப்பதாலும் அச்சுசிலவு அதிகமாயிருப்பதாலும் முழு சஞ்சிகைகளை இனாமாக அனுப்ப முடியவில்லை. ஒவ்வொரு சஞ்சிகையையும் 0—8—0 மதிப்பிட்டிருக்கிறது. வேண்டுவோர் 0—8—0 ஸ்டாம்பு அனுப்பினாலும் அல்லது 0—8—0 மணியார்டர் அனுப்பினாலும் ஒரு மாதிரி சஞ்சிகை அனுப்பப்படும்.

## சந்தா விவரம்.

| | |
|---|---|
| ஒரு வருஷம் 1-க்கு தபால்செலவு உள்பட ரூபா 5—0—0 | சிங்கப்பூர் பினாங்கு முதலிய இடங்களுக்கு ரூபா 5—12—0 |

தனி சஞ்சிகை விலை அணா 0—8—0

வேண்டுவோர்,

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
மானேஜர், அகில இந்தியா லா ஜர்னல் ஆபீஸ்,
80, கொண்டமாபுரம் தெருவு, திருவள்ளூர்.
என்று எழுதவும்.

---

## அகில இந்தியா லாஜர்னல் பத்திரிகையைப்பற்றி வந்திருக்கும் அபிப்பிராயங்கள்.

### "சுதேசமித்திரன்" பத்திரிகை எழுதுவதாவது:—

பொது ஜனங்களுக்கு உபயோகமான அனுபவ சட்ட ஞானத்தை இந்தியா கவர்மெண்டு சட்டம், மாகாண கவர்மெண்டு சட்டம், முதலியவைகள் மூலமாயும் ஹைகோர்ட்டு தீர்ப்புகளின் மூலமாயும் உண்டாக்க தமிழில் மாதம் ஒருமுறை வெளியிட உத்தேசத்தோடு வெளிவந்திருக்கும் "அகில இந்தியா லா ஜர்னல்" என்ற பத்திரிகை

யின் முதல் சஞ்சிகை நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதில் முதல் 24 பக்கங்களில் கேசுகளின் ரஸமான குறிப்புகளும் இதற்குப் பின்னிருக்கும் 32 பக்கங்களில் கேஸ் ரிபோர்ட்டுகளும் காணப்படு கின்றன. இவை சட்டஞானம் தனிப்பட இல்லாதவர்களுக்கும் இனிமையாயிருக்கும்படி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக் கின்றன.

"நவசக்தி பத்திரிகை எழுதுவதாவது

அகில இந்தியா லாஜர்னல்:—இது திருவள்ளூரினின்று வெளி வரும் ஒரு மாதப் பத்திரிகை. ஆங்கிலமறியாதவர் சட்ட சம்பந்த மான பல விஷயங்களை அறிந்துகொள்ள இப்பத்திரிகை பெரிதும் துணைசெய்யும். நீதிமன்றங்கள் பலவற்றுள் அவ்வப்பொழுது செய் யப்படும் முக்கியமான தீர்ப்புகள் இதில் காணப்படுகின்றன. இவை நியாயவாதிகளுக்கும் கிராமங்களில் நீதிபரிபாலனம் செய்வோர்க்கும் வழிகாட்டியாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

"சுயராஜ்யா" (தமிழ்) பத்திரிகை எழுதுவதாவது:—

துரைத்தன சட்டங்களை தமிழ் மொழியில் விளக்குவதே ஒரு புதிய பெரிய முயற்சியாகும். தென்னாட்டு......கச்சேரி வியவஹாரங் களைக் கொண்டுள்ளவர்கள் சட்ட பூர்வமான நுட்பங்களையும் நீதிபதி களின் தீர்ப்புகளையும் அறிந்து செய்வார்களாயின் பொன்மலர் நாற்ற முடைத்து என்னலாம். ஆங்கிலம் அறியாத சட்ட அறிஞர்களுக்கு இவ்வளவு காலமாக இருந்த ஒரு குறையை இம்மாஸிகை நீக்குகின் றது. சென்னை நீதி ஸ்தல வியவஹாரங்களும் அகில இந்தியா சர்ச் சைகளும் இங்கு தரப்படுவதற்கும் இளந்தமிழ் நடையில் இலங்குவ தற்கு உரியதாயிருக்கின்றன............இம்மாஸிகை அழகுமிளிர்ந்து விளங்குவதென்றே நினைக்கிறோம். தமிழர் ஆதரிக்கவும்.

சென்னை "ஹிந்து" பத்திரிகை எழுதுவதாவது:—

தமிழ் தெரிந்த மக்களுக்கு உதவும்படி தீர்மான சட்டத்தை மொழிபெயர்த்து எழுத முன்வந்திருக்கும் இம்முயற்சியானது அவசி யம் வரவேற்கத்தக்கது. நமது நாட்டில் வழங்கும் சட்டத்தில் பெரும்பான்மையும், சட்டப் பத்திரிகைகளில் பிரசுரப்படுத்தியிருக்கும் உயர்ந்த கோர்ட்டுகளின் தீர்மானங்களில் காணப்படுகின்றன. இவ்

வித ரிபோர்ட்டுகள், தீர்மானங்கள் எழுதப்பட்டிருக்கும் ஆங்கில பாஷையிலேயே இருக்கின்றன. ரிபோர்ட்டுகளில் உள்ள தீர்மானங்களை தமிழ் மாத்திரம் படிக்கத் தெரிந்தவர்களுக்காக முதல் முதலாக மொழிபெயர்த்து வாவிருக்கும் இந்நூதன முயற்சி அவசியம் ஆதரிக்கப்பட வேண்டும். இப்பத்திராசிரியர்கள், கடினமான சட்ட பதங்களுக்கு சரியான தமிழ் பதங்களைத் தேர்ந்தெடுக்க மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக எங்களுக்கு தெரியவருகிறது. நாளடைவில் தமில் மக்கள் இப்பத்திரிகையில் உபயோகப்படுத்திவரும் பிரயோகங்களை அனுஷ்டித்துக்கொள்வார்கள் என்பதைப் பற்றி எமக்கு சந்தேகமில்லை. சட்ட வசனம் என்னவென்றால் சட்டம் தெரியாமலிருப்பது ஒரு சமாதானமாகாது என்பது. தமிழ் மக்களுக்கு சட்டங்களினுடைய நுட்பங்களையூட்டி வாமுயலும் இம்முயற்சியினால் அறியாமை பெரும்பாலும் நீங்குமென்றே நம்பலாம்.

### "தமிழ்நாடு" எழுதுவதாவது:—

திருவள்ளூரினின்று வெளிவரும் அகில இந்தியா லா ஜர்னலின் ஜூன்மாதத்திய சஞ்சிகை நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது ஒரு அரிய, மாதாந்திர சட்டப் பத்திரிகையாகும். சட்ட விஷயங்களில் தற்காலம் கல்வி கற்றோரே, அவரிலும், சட்டம் கற்றோரே முற்றிலும் அறிந்திருக்கின்றனர். பொது ஜனங்கள் சட்ட விஷயங்களை அறியாது அதிக நஷ்டத்திற்குள்ளாகின்றனர். அத்தகையருக்கும் படித்தவர்களுக்கும் இப்பத்திரிகை இன்றியமையாதது. இதில் சிவில் கிரிமினல் கோர்ட்டுகளில் நடக்கும் சகல வியவகாரங்களும் நன்கு விளக்கி எழுதப்பட்டிருக்கிறது. கோர்ட்டில் பொழுது போக்குகின்ற வக்கீல் குமஸ்தாக்களும், ஓயாது விவகாரம் நடத்தும் பொது ஜனங்களுக்கும், இது இன்றியமையாதது. வழக்குகளை நடத்தும் நேயர்களுக்கு இப்புத்தகத்தில் கல்கத்தா, பம்பாய், டில்லி முதலிய இடங்களில் நடக்கும் நடவடிக்கைகளின் மாதிரிகளும், சென்னை நீதிஸ்தலத்தில் நடக்கும் முக்கிய வழக்குகளும், ஜட்ஜுகளின் தீர்ப்புகளும் இதில் வெளிவருவதினால் வெளியூர்களில் இருக்கும் வக்கீல்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும், இப்பத்திரிகை அதிக பயனுள்ளதாகும். இதனை யாவரும் போற்றி நன்மை யடைவாராக.

---

**சென்னை " லா வீக்லி ' சட்டப் பத்திரிகை எழுதுவதாவது:—**

" திருவள்ளூரினின்று M. S. பார்த்தசாரதி அய்யங்கார் B. A., B.L., அவர்களால் பிரசுரம் செய்யப்படும் தமிழ் அகில இந்தியா லாஜர்னல்" பத்திரிகையை வரப்பெற்றோம். ஷை ஜர்னலின் முதல் மூன்று சஞ்சிகைகளை நாம் சற்று எச்சரிக்கையாகவேகுணதோஷங்களை ஆராய்வதற்கென்றே பரிசோதித்துப் பார்த்ததில், நமது நாட்டில், விஷயங்களில் மிகுந்த தேர்ச்சியடைந்திருந்தும் ஆங்கிலபாஷை யறியாதிருக்கும் சட்ட வியவஹாரஸ்தர்களுக்கு இப்பத்திரிகை பெரிதும் துணைசெய்யும் என்பதை நாங்கள் திரமாகச் சொல்லுவோம். ம-ா-ா-ஸ்ரீ M. S. பார்த்தசாரதிஅய்யங்கார் அவர்கள்தாம் பிரசுரப்படுத்தியிருக்கும் இச்சஞ்சிகைகளில் கேஸுகளைப்பொறுக்கிஎடுப்பதில் அதிக கவனம் செலுத்தியிருக்கிறார். சட்ட பாவங்கள் மிகவும் நுட்பமாகவும் கடினமாகவும் இருப்பினும், அவைகளின் மொழிபெயர்ப்பு அவைகளின் உண்மையான அர்த்தஸ்வரூபத்தை நன்கு விளக்குகிறது. யாவருக்கும் சுலபமாக விளங்கும்படியான நடையில் அவைகள் எழுதப்பட்டிருப்பதை கவனிக்குமிடத்து, ம-ா-ா-ஸ்ரீ M. S. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் தாம் மேற்கொண்டிருக்கும் இக்காரியத்தை மிகவும் சரியாகவும் திருப்திகரமாகவும் நடத்துவதற்கு மிகுந்தபுத்திகூர்மையும் சாமர்த்தியமும் வாய்ந்தவர் என்றுதெரியவருகிறது. நமது நாட்டில் ஒரு தமிழ் சட்டப்பத்திரிகை வெகுநாளாக இல்லாமல் பெருங்குறைவா யிருந்தது. ம-ா-ா-ஸ்ரீ M.S. பார்த்தசாரதிஅய்யங்கார் அவர்கள் இனிகூடியசீக்கிரத்தில் பெரியதோர் ஆதரவுபெற்றுஇந்த ஜர்னல் இன்றியமையாதிருக்கும் தமிழ்மக்களால் மேன்மேலும் ஆதரிக்கப்படுவார் என்று நம்பத்துணிகிறோம். ம-ா-ா-ஸ்ரீ M.S. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள் தமது இம்முயற்சியில் ஜெயம்பெற்று வருவதல்லாமல் அவருடைய ஜர்னல் தினே தினே நன்கு மதிக்கப்பட்டு, வளர்ந்து நம்முடன் வேரூன்றி ஸ்திரம் பெறும் என்று நாம் ஆசி கூறுவோம்.

**' தேச ஊழியன்' எழுதுவதாவது :—**

அகில இந்தியா லா ஜர்னல். இம்மாத வெளியீடு தமிழ் நாட்டிற்கு பெரிதும் பயன்தரத்தக்கது. தமிழ்நாடு நிதிமன்றங்களில் ஆங்கிலத்தில் பேசும் நியாவாதிகளுக்கு தமிழிலும் வழக்குகளை தாராளமாய் எடுத்துரைக்கலாமென்பதற்கு இதன் உதயமே தக்க சான்றாகும். சட்ட சம்பந்தமான அறிவும் தமிழ் மக்களுக்கு இன்றியமையாததனால் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டியது அவர்கள் கடனாகும்.

### " அகிலஇந்தியா லா ரிபோர்ட்டர் ' எழுதுவதாவது :—

நாங்கள் இப் பத்திரிகையின் முதல் மூன்று சஞ்சிகைகளை வரப் பெற்றோம்.............பிரிவிகௌன்சில் கேஸுகளின் குறிப்புகளும் இந்தியாவிலுள்ள ஹைகோர்ட்டு கேஸுகளின் குறிப்புகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இந்த பத்திரிகை யானது தமிழ் தெரிந்த மக்களுக்காகவென்று ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதான மிகவும் கஷ்ட மான செய்கையை நடத்துவதில், தெளிவானதும் சுலபத்தில் புரி யும்படியானதுமான நடையில் விளங்கச்செய்யும் இந்த பத்திரிகை மிக வும் நன்குக ஆதரிக்கப்படவேண்டும்.

### ஆனந்த விகடன் எழுதுவதாவது :—

மேற்படி பத்திரிகையின் முதல் சஞ்சிகைகள் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டன. இது ஆங்கிலமறியாத தமிழ் மக்களுக்கு சட்ட அம்சங்களை நன்குய் போதிக்கக்கூடிய ஒரு அரிய மாதாந்திர பத் திரிகையாகும். சென்னை ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி, ஓட் உரிமை, கோர்ட்டுகளில் வியவஹாரம் நடத்தும்வகை, கோவாபரேஷன் என்னும் ஐக்கிய நாணய சங்கக் கிளர்ச்சி, கவர்ன்மெண்டின் அமைப்பு, அதிகார எல்லை, முதலிய அரியபெரிய விஷயங்களைக் குறித்து உயர்ந்த வியாசங் களும் வெளி வருகின்றன. இது ஜமீன்தார்கள், உண்டிக்கடை வியா பாரிகள், மிட்டாதார்கள், சுரோத்திரியதார்கள், லோகல் போர்டு மெம் பர்கள், ஹானரரி மாஜிஸ்டிரேட்டுகள், பஞ்சாயத்து கோர்ட்டு மெம் பர்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், பெடிஷன் எழுதுவோர், இன்னும் மற்ற வியவகாரஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானது.

### மதுரை ' செந்தமிழ் எழுதுவதாவது :—

அகில இந்தியா லா ஜர்னல்:—இஃதொரு மாதாந்தத் தமிழ்ப்பத் திரிகை. அரசியற் சட்டங்களின் அமைப்பையும் அதுபற்றி நியாயாதி பதிகள் அவ்வப்பொழுது செய்துள்ள தீர்ப்புக்களையும் ஆங்கிலங்கல்லா தாரும் அறிந்துகொள்ளுமாறு இது வெளியிடப்படுன்றது. இது மிகவும் அரியதொரு முயற்சியேயாம். இதன்பயனும் அளவிடற்பால தன்று. தகுதிவாய்ந்த வழக்கறிஞர்களே இதனை மேற்கொண்டிருத்த லால் இனிது நிறைவேறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது இதன்

பொருளுரைகள் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு சஞ்சிகையும் 64-பக்கங்களுடையதாய் நல்லகாகிதத்திற் சுத்தமாக அச்சிடப்பெற்று விளங்குகிறது.

ஸ்ரீரங்கம் "பிரஜானுகூலன்" எழுதுவதாவது:—

இது ஒரு சட்ட சம்பந்தமான மாதப்பத்திரிகை. அத்தொழிலில் விசேஷப்பயிற்சி பெற்ற நிபுணர்களால் அநுபவச் சார்பில் நடத்தப்பெறுவது. எவ்வளவு சுலபமாய் விஷயங்களை விவரிக்க இயலுமோ அவ்வளவுக்கும் முயன்று சட்ட சம்பந்தமான ஞானம் பொது ஜனங்களுக்கு உண்டாகும்படி நிரம்பவும் பிரயாசை எடுத்துக்கொண்டு நடத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் இத்தகைய பத்திரிகை இதுவொன்றில்லை. தோன்றிய சிலவும் மறைந்தன. இப்பத்திரிகையைத் தமிழ் அபிமானிகள் ஆதரித்து விசேஷித்த நன்மையை அடைவார்களென்று நம்புகிறோம். பன்னிரு சஞ்சிகைகளையும் சேர்த்துப் பயிண்டு செய்தபிறகு தான் இதன் அருமை தெரியும். இப்பத்திரிகையின் அபிவிருத்தியை நாம் மனப்பூர்வமாய் விரும்புகிறோம்.

---

## சென்னை லோகல் போர்ட்ஸ் மான்யுவல்.

### சென்னை ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி.

லோகல் போர்ட்ஸ் ஆக்ட் இப்பொழுது திருத்தப் பிரேரபணையில் இருந்து வருகிறது. முக்கியமான அம்சங்களில் அது திருத்தப்படப் போவதால் அதை நாங்கள், குறிப்பு, அர்த்த விளக்கம் முதலியவைகளுடன் தீர்மானமான கேஸுகளின் சாராம்சங்களையும் தெரிவித்து முன்னிலும் மிகவும் விரிவாக சுமார் 1000 பக்கங்களுடன் தமிழில் பதிப்பிக்கப்போகிறோம். ஒவ்வொரு லோகல்போர்டு அதிகாரி, அங்கத்தினர் இவர்களுக்கு முக்கியமானது. பிரசுரமாகா முன் விலை ரூ. 6–0–0. ஆர்டர்கள் ரிஜிஸ்தர் செய்யப்படும். பிரசுரமானபிறகு விலை உயர்த்தப்படும்.

**C. A. சிவபூஷணம் அண்டு கோ.**

திருவள்ளூர்,

M. S. M. Ry.